விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 15 செவ்வாய்க்கிழமை (30.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 193

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# புலிகளின் சரணடைவு சாட்சியால் நெருக்கடி

## ஜெனிவா விரைகிறது அரச உயர் குழு

ஜெனிவாவில் நடந்துவரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக விடுதலைப் புலிகளின் சரணடைவு குறித்து வழங்கப்பட்டுவரும் சாட்சியங்களின் நெருக்கடிகளைச் சமாளிக்க அரசாங்கத்தின் சார்பில் உயரதிகாரிகள் அடங்கிய குழுவொன்று அவசரமாக அனுப்பி வைக்கப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைய வெளிவிவகார அமைச்சு இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தெரிய வருகிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் சிலரின் உறவினர்கள் தற்போது ஐ.நாவில் நேரடியாக சாட்சியமளித்து வரும் நிலையில், அது தொடர்பில் விளக்க மளிக்கவே இக்குழுவினர் அங்கு செல்லவுள்ளதாக தெரியவருகின்றது. போர்க்குற்றம் தொடர்பில் தற்போது

02ஆம் பக்கம் பார்க்க....


# நயினையில் இன்று தேர்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இன்று காலை 6.30 மணிக்கு தம்ப பூசை, 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று மு.ப.9 மணிக்கு அம்பாள் தேரேறி ஆரோகணிக்கவுள்ளார். (செ-11)

# கே.பியின் சொத்துக்களை முடக்க அரசு நடவடிக்கை



குமரன் பத்மநாதனின் சொத்துக்களை முடக்குவதற்கு விசாரணை நடத்தப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இ[illegible]பாக வெளிவிவகார அமை[illegible] தகவலின் படி,

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் ச[illegible] விவகாரப் பொறுப்பாளர் கே.பி என அழைக்கப்படும் குமரன் பத்மநாதனின் சொத்துக்களை முடக்குவதற்கான விசாரணைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூடிய விரைவில் அவரின் சொத்துக்களை முடக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

இதேவேளை குமரன் பத்மநாதன் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான தடையானது கடந்த பெப்ரவரி மாதம் விதிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் சர்வதேச ரீதியில் இன்னமும் உயிர்ப்புடன் இருப்பதனால் அது குறித்து பூரண கண்காணிப்பு நடத்தப்பட்டு வருவதாகவும், புலனாய்வு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

குமரன் பத்மநாதனை மகிந்த அரசு ஏன் பாதுகாத்து வைத்திருந்தது

02ஆம் பக்கம் பார்க்க....

# காணிப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிட்டும்

## இராணுவத்திற்கும் அறிவித்துள்ளோம்-சுவாமி



யாழ். வலி வடக்கு பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட வறுத்தலைவிளான் மற்றும் கீரிமலை பொது மக்களின் காணிகளை மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது யாழ். இராணுவ கட்டளை தளபதி உட்பட பாதுகாப்பு தரப்பு உயரதிகாரிகளுடன் மீள் குடியேற்ற அமைச்சர் பொது மக்களின் காணி விடுவிப்பு தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

முன்னாள் பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் இலங்கை தமிழரசு கட்சியின் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளு

02ஆம் பக்கம் பார்க்க....

# குற்றங்களை மறைக்கவே அதிகாரத்துக்கு வர துடிப்பு

(கொழும்பு)

நாட்டில் அரசியல் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றிக்கொள்வதற்கு முயற்சிப்பது தங்களால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகளை மறைத்துக்கொள்வதற்கே என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தனது பிறந்த நாளான நேற்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க [illegible] சென்று மத வழிபாடுகளில் [illegible] கொண்டிருந்தார். அதனை தொடர்ந்து [illegible] அவர்.

[illegible] ஆட்சியில் பெரும் இடம் பெற்ற [illegible] மோசடிகளை மறைத்து கொள்வதற்காகவே மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்ள சிலர் முயற்சிப்பதாக அவர் கூறியுள்ளார். (செ-11)

# ரூ.600 மில்லியன் பணத்தை புலிகளுக்கு கொடுத்த மகிந்த

## தேர்தலை புறக்கணிக்க என ஜே.வி.பி சாடல்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 2005-ம் ஆண்டு வடக்கில் தமிழ் மக்கள் தேர்தலை புறக்கணிப்பதற்காக விடுதலை புலிகளுக்கு பணம் வழங்கினார் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டிற்காக புதிய பயணம் என்ற தலைப்பில் கடுவெல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2005-ம் ஆண்டு மஹிந்த ராஜபக்சவிடம் நிறைய பணம் இருக்கவில்லை. அனைத்திற்கும் பணம் வழங்குவதற்கு அவரிடம் பணம் போதவில்லை.மஹிந்த ஜனா திபதியாகிய பின்னர் வடக்கில் பாரிய வீடமைப்பு திட்டமொன்றை ஆரம்பித்தார். சுனாமியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்புதிட்டமே அது.

இதன்போது ராடா நிறுவனத்திற்கு 600 மில்லியன் பணத்தை ஒதுக்கினார்கள். தேடிச் செல்லும் போது அங்கு ஒரு வீடேனும் கட்டியிருக்கவில்லை.

இறுதியில் சிக்கப்போவது மஹிந்தவே என அவர் மேலும் குறிப்பிட்டார்.

நவாலி அட்டகிரி கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா இன்று





இத் திருவிழா சிறப்புற பிரார்த்திப்போர்
சிறி தேவிகருமாரி நகைமாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்

83/01, கஸ்தூரியார் வீதி,
செம்மாதெரு, யாழ்ப்பாணம்.
பெண்ணுக்கு பொன் அழகா?
பொன்னுக்கு பெண் அழகா?

முற்பகல் 10.00 மணிக்கு
இரதோற்சவம்

வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறையில்லை - மனமே
கந்தனுண்டு கவலையில்லை

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின் சரணை...

இலங்கை அரசு உள்ளக விசாரணை நடத்திவரும் நிலையில், அரசின் மீதும் படையினர் மீதும் சேறு பூசும் நடவடிக்கையே இதுவென அரசாங்க தரப்பு தகவல்கள குறிப்பிடுகின்றன.

அண்மையில் ஜெனிவா மனித உரிமைச் சபையில்,புலிகளின் சிரேஷ்ட தளபதிகள் மற்றும் உறுப்பினர்களின் உறவினர்கள், தாம் நேரடியாக எதிர்கொண்ட யுத்த பாதிப்பு, தமது உறவுகள் இலங்கை படையினரால் கூட்டிச் செல்லப்பட்ட விதம், பெண்பிளைகளை ராணுவம் வழி நடத்திய விதம் என்பவற்றை சாட்சியம் பதிவு செய்துள்ளனர்.

செப்ரெம்பரில் வெளிவரவுள்ள ஐ.நா அறிக்கை பெரும்பாலும் தயாராகிவிட்ட நிலையில், இந்த நேரடி சாட்சியப்பதிவானது இலங்கைக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்படியாக அமையவுள்ளது குறிப்பிடத்தக்கது. (செ-11)





ஓம் நமசிவாய
ஸ்ரீ நாக கன்னி அம்பாள் துணை

### சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீ நாககன்னி ஆலயம்

### ஆனிப்பூரணைத் தீர்த்தோற்சவமும் தீ மிதிப்பும்

காலம்: 01.07.2015 புதன் காலை 10.00 மணி
மகோற்சவ குரு நாகசித்த ஞானகுரு இந்திரன் ஐயா
*நாககன்னி அம்பாளின் இன்னருள்*
சொற்பொழிவு
சைவ சித்தாந்த கலாநிதி சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் M.A
*நாககன்னி அம்பாளின் அற்புதங்கள்*
இந்து தர்மாசிரியர் சைவப்புலவர் க.நித்தியதச்தரன் M.A
மங்களவாத்தியம் சித்தன்கேணி கண்ணன் குழுவினர்

அடியார்கள் வருகைதந்து அம்பாளை வழிபட்டு அருள் வாக்குகளை கேட்டுப் பயனடையுமாறு வேண்டுகின்றோம்.

உபயகாரர்
திரு.ந.குணபாலசிங்கம்
குடும்பம் சுன்னாகம்

நாகசித்த ஞானகுரு இந்திரன் ஐயாவும்
தொண்டர்களும் (C-1433)


## மரண அறிவித்தல்



### இரத்தினசிங்கம் முரளிதரன் (முரளி)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், டோகா - கட்டாரை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் முரளிதரன் நேற்று (29.06.2015) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், வெண்ணிலா, ஜனார்த்தனன் (டோகா), காலஞ்சென்ற வளர்நிலா மற்றும் றஞ்சலா, பகீரதன் (டோகா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வரதராஜன் (அவுஸ்திரேலியா), கலைச்செல்வி, கஜேந்திரன் (டோகா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபிநயா, சுஜிவன், லோஷனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தாரகி, கவிநாஸ் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2015) பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
பாக்கஸ் லேன், மானிப்பாய். (979) 077 667 6897


### இறுதிச் சந்தர்ப்பம்!

மீண்டும் O/L உடன்
சுவிஸ், நியூசிலாந்து,சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய



**Business & Hotel Management**

யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!

SEGi University & Colleges | B.H.M.S. Business & Hotel Management School | nmit Nelson Marlborough Institute of Technology | William Angliss Institute
MALAYSIA | SWITZERLAND | NEW ZEALAND | AUSTRALIA

கற்கைநெறி ஆரம்பம் நாளை புதன்கிழமை காலை 10 மணி

இதுவரை பதிவுசெய்யாதவர்கள் நாளை காலை 10 மணிக்கு முன்னர் நேரில்வந்து பதிவினை மேற்கொள்ளவும்

வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ். கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...

SIKARAM Get Set for Careers & Take off Your Dreams
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...
STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION – VISIT VISA

Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.(வைத்தியசாலை பின்புறம்)
Call: 077 36 16 798
021 222 00 11


## காணி...

மன்ற உறுப்பினர்களும் இதன்போது கலந்து கொண்டனர்.

இதன்போது மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் காணி தொடர்பான அனைத்து பிரச்சினைகள் தொடர்பிலும் இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் முடிவு எட்டப்படும் எனவும் கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது முன்னாள் பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்ததாவது,

1100 ஏக்கர் காணிகளை விடுவதாக கூறி, அவர்கள் 600 ஏக்கர் காணியை தான் விடுவித்துள்ளார்கள். மிகுதி இன்னும் விடுவிக்கப்படவேண்டியுள்ளது. அதற்காக நாம் முயற்சித்த போது, எமக்கு சாதகமான பலன்கள் கிடைக்கப்பெற்றுள்ளது. வெகுவிரைவில் மக்களின் கைகளில் மக்களின் காணிகள் வழங்கப்படும். அத்துடன் பலாலி விமானத்தளத்தை விஸ் தரிக்கும் திட்டமும் உள்ளது அது தொடர்பிலும் நாம் அவதானித்து வருகிறோம் என விஜயகலா தெரிவித்தார். (செ-11)


### நவீன அழகிய பிறேம் (Glass Crystal Frame)

கிறிஸ்ரல் பிறேம் போன்ற அழகிய பிறேம் சகல அளவுகளிலும் 30 நிமிடங்களில் பெற்றுக் கொள்ளலாம். (086)

347, கே.கே.எஸ் வீதி, (முட்டாஸ் கடைச் சந்தி) யாழ்ப்பாணம். 021-222 8510
"விஸ்ரா விஷன்" 52, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5187


### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் விசேட பொதுக்கூட்டம் பிற்போடல் தொடர்பான அறிவித்தல்

எமது சங்கத்தின் 05-07-2015 ஆம் திகதி நடைபெறவிருந்த விசேட பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

புதிய விசேட பொதுக்கூட்ட திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செயலாளர்
Dr.தி.சிறிகரன் (C-1437)


### தென்னிந்திய யாத்திரை

பாடசாலை விடுமுறையை அனுசரித்து நடைபெறும் யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா,கேரளா,பாண்டிச்சேரி,கர்நாடகா ஊடான யாத்திரை

நாட்கள் 16 யாத்திரை 10 ஆரம்பம் 10.08.2015

மலைக்கோட்டை விநாயகர், பஞ்சபூதத்தலங்கள், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, 9 நவக்கிரக ஆலயங்கள், மேல்மருவத்தூர்,பொற்கோவில், மதுரைமீனாட்சி, குருவாயூர், மைசூர் சாமுண்டேஸ்வரி, திருக்கடையூர், கன்னியாகுமரி, [illegible] உட்பட 65க்கும் அதிக ஆலயங்களை தரிசிக்கலாம்.

*பெற்றுக் கொள்ளும் [illegible] எமது சேவைகள்:*

(இரு வழி விமான ரிக்கட், மூன்று வேளை உணவு, குடிநீர், தரமான தங்குமிடம், AC வாகன வசதி எயார் போட் போக்கு வரவு வாகன வசதி, 60 புகைப்படங்கள் மற்றும் ஆலய தரிசனக் கட்டணங்கள் உட்பட) மேல் விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு:-
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
மகன் ராஜன்
0777680102, 0777362154 (C-1435)



### A/L 2015 → பொருளியல் கருத்தரங்கு

★ அலகு ரீதியான மீட்டல்
★ அலகு ரீதியாக மாதிரி வினாக்கள்
★ விடையளிக்கும் முறை
★ புள்ளித் திட்ட முறை

ஆசிரியர் S.ஜெயக்குமார் B.A (Hons) Eco SPL, MA in Eco, PGDE

வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்

ஆரம்பம் நாளை காலை 9.00 மணிக்கு

இடம் → DCM [illegible] (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்) C-1438


## கே.பியின் சொத்து...

என கேள்வி எழுப்பியுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.(செ-11)


### விற்பனையாளர் தேவை

எமது பிடவை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள ஆண்/பெண் விற்பனையாளர் தேவை. (ஆண்களுக்கு தங்குமிட வசதி உண்டு) பழகுபவர்களும் விரும்பத்தக்கது
சிவகணேசன் ரெக்ஸ்ரையில்
பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம். (983)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அச்சுறுத்தி 50 இலட்சம் ரூபா கப்பம் கோரியவர் கைதானார்

(கொழும்பு)

கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், குழந்தையை கடத்தப் போவதாக தொலைபேசியில் அச்சுறுத்தி 50 இலட்சம் ரூபாயை கப்பமாக கோரிய சந்தேகநபர் ஒருவரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்துள்ளதாக மிரிஹான விசேட குற்ற நடவடிக்கை பிரிவு அறிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள 39 வயதான சந்தேகநபர் மொரத்தொட்ட பிரதேசத்தை சேர்ந்தவர் என்றும் அவர், ஆட்களை அச்சுறுத்தி கப்பம் கேட்டமை தொடர்பிலான பல்வேறான சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ)

# முன்னாள் எம்.பி.அலஸுக்கு சட்டமா அதிபர் வாக்குறுதி



(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸை எதிர்வரும் 6 ஆம் திகதி வரையில் கைது செய்யமாட்டோம் என்று சட்டமா அதிபர், உயர்நீதிமன்றத்தின் கவனத்துக்கு நேற்று திங்கட்கிழமை கொண்டுவந்தார்.

ராடா நிறுவனத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ள டிரான் அலஸ், தன்னை கைதுசெய்வதிலிருந்து தடுப்பதற்கான கட்டளை பிறப்பிக்குமாறு உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# சேவை நலன் பாராட்டு - 01-07-2015

ஆசிரிய மத்திய நிலையம் - வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்

தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி

## திரு. துரையப்பா தர்மானந்தசிவம்

B.A, (Hons) Dip in Edu, M.Ed, (SLTS-I)



### நாடகத்துறையில் நாம் பெற்ற நல்ல நண்பன்

தர்மா எமது நண்பன். கிளிநொச்சியின் மைந்தன். கல்வித்துறையில் கிளிநொச்சியில் உருவாகிய மூத்த பிரஜைகளில் குறிப் பிடத்தக்க மனிதர். கஷ்ட மான குடும்பச் சூழலிலிருந்து முகிழ்ந்தவர். காலமும் சூழ்நிலையும் அவரை புடம் போட்டது.

அரசியல் விஞ்ஞானப் பட்டதாரியான அவர் கல்வித் துறையிலும் மட்டுமன்றி நாடகத் துறையிலும் அவருடைய ஆர்வமும் செயற் பாடும் அபாரம். சமூக மாற்றத்திற்கான சிறந்த கருவியாக அரங்க செயற்பாடுகளை நம்பும் அவர் நாடக விமர்சனங்களை சிறப்பாக முன்வைக்கும் திறன் பெற்றவர். நல்ல நடிகர், நல்ல நண்பன், கடந்த காலத்தில் எம்முடன் இணைந்து நாடக ரீதியான கல்வி உலகிலும் சேவைக் கால ஆசிரியராகவும், தொழில் வழிகாட்டல் அதிகாரியாகவும் சிறப்புடன் சேவையாற்றினார். தொழிலில் "ஓய்வு என்பது வாழ்வின் ஓய்வல்ல", தொடர்ந்து அவர் பெற்ற பல்துறை ஆற்றலைப் பயன் படுத்தி சமூக முன்னேற்றத்திற்காக செயற்பட்டு நீடூழி வாழ்கவென்று வாழ்த்துகின்றோம்.

நாடக நண்பர்கள்
விங்தன், மகிழ்ச்சிகரன்

(769)

### எனது பார்வையில் தர்மா

1984 பங்குனி மாதம், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி வளாகம். இது நாம் இனந்தெரியா உறவுகளாய் கண்டுகொண்ட முதல் சந்திப்பு,அதே வருடம் பங்குனி மாதம் கொழும்பு விவேகானந்தாக்கல்லூரி சக ஆசிரியராக மீண்டும் சந்தித்தோம். அன்றிருந்து இன்றுவரை தொடரும் அந்த இனம்புரியா உறவு, சுமார் மூன்று வருடங்கள் ஒரே அறையில் தங்கி வாழ்ந்த சுவையான அனுபவங்கள் நிறையவே உண்டு.

அமைதியான சிந்தனை, ஆரோக்கியமான அறிவு, தெளிவான சமூகக் கண்ணோட்டம், உயர்வான எண்ணம், நீதி, நேர்மை, நியாயம். இதுதான் தர்மா! மௌனமான புன்னகையால் புவனத்தைக் கூட வென்றெடுக்கும் ஆற்றல் இவை யாவும் இவருக்கு இயற்கை ஈந்தளித்த பொக்கிஷங்கள்.

சமூகத்தின் பால் அக்கறை கொண்ட இவர் சமூகப்பிரச்சினைகள் அடிப்படையிலிருந்து தீர்க்கப்பட வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். பல அவிழ்க்க முடியாத சிக்கல்களுக்கு சிக்கனமான சிந்தனை ஓட்டத்தால் பதில் தரும் ஆற்றல் உண்டு. எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் மனிதர்கள், பகுத்தறிவு கொண்ட அனைவரும் ஏற்றத்தாழ்வுகளை மறந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் நிறைவாகவே இவரிடம் உண்டு. எண்ணத்தில் மட்டுமன்றி நடைமுறையிலும் வாழ்ந்து காட்டியமையை உணர்வுபூர்வமாக அனுபவித்த சம்பவங்கள் ஏராளம்.

மொழி, மதம், இனம் அனைத்தையும் கடந்து மனதால் மாற்றம் கொண்ட மனிதனாகவே அவதானிக்க முடிகிறது. எந்த நிலையிலும் தர்மா என்ற பெயரிற்கமைவாய் வாழும் இந்த மனிதர் மகத்தான ஓர் மனிதர் என்பது உண்மையே. இந்த நட்பும் இந்த உறவும் என்றும் தொடரவும் புதிய முயற்சிகள் வெற்றி பெறவும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பேருவகை அடைகிறேன்.

அன்புடன் - மூர்த்தி (சுவிஸ்)
கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி நண்பன்

பெற்றோர் : ஆறுமுகம் துரையப்பா, துரையப்பா கமலாம்பிகை
பிறந்த இடம் : உருத்திரபுரம் கிழக்கு (D8), கிளிநொச்சி
வாழ்விடம் : சேர்ச்லேன் கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
துணைவியார் : மாலினி தர்மானந்தசிவம்
(ஆசிரியர். பெரியபுலம் மகாவித்தியாலயம்)
பிள்ளைகள் : த. யதார்த்தன் (யா / இந்துக்கல்லூரி)
த. நவீனன் (யா / இந்துக்கல்லூரி)
த. நித்திலன் (கிளி /மகாவித்தியாலயம், கிளிநொச்சி)

ஆரம்பக்கல்வி 1 - 5 } (இந்து மகா வித்தியாலயம் D-7 கிளிநொச்சி)
இடைநிலைக் கல்வி 6 - 11 } (இந்துக் கல்லூரி)

தரம் 12 -13 யா/மகாஜனாக்கல்லூரி, தெல்லிப்பழை.

பட்டப்படிப்பு 1977- 1981 : பேராதனைப் பல்கலைக்கழகம்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
முதுகலைமாணி (Med) : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (வவுனியா வளாகம்)

தொடர்புகளுக்கு : T.P : 0772730773

**பன்முக அறிவு பெற்ற செயல்வீரர் :** திரு. து. தர்மானந்தசிவம் அவர்கள் கல்வித்துறையில் அரசறிவியல் ஆசிரியர் மற்றும் சமூகக் கல்வி சேவைக்காலஆசிரிய ஆலோசகர், வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர், தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி ஆகிய சேவைகள் மூலம் மாணவர்களுக்கு மகத்தான பணிபுரிந்து ஓய்வு பெறுகின்றார். அரசியல் விஞ்ஞான சிறப்புப் பட்டதாரியான அவர் சிறுவயதில் இருந்தே பொது உடைமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர். சிறந்த சமூக சேவையாளரான அவர் தனது சேவைக்காலத்தில் வசதி குறைந்த மாணவர்களது கல்வி வளர்ச்சியிலும், வசதி குறைந்த பாடசாலைகளின் அபிவிருத்தியிலும் ஆழ்ந்த அக்கறை உடையவராகவும், தொழில்நுட்ப ரீதியான கல்வியில் மாணவர்களை ஈடுபடுத்தவும் அயராது உழைத்தவர். இவரது பன்முகப்பட்ட அறிவும், ஆற்றலும் எந்தவொரு மாணவரது வாழ்விலும் மாற்றத்தை ஏற்படுத்தவல்லன. தாம் சிறப்புப் பட்டம் பெற்ற அரசியல் விஞ்ஞானப் பாடத்தில் ஆழ்ந்த புலமையுடையவர். சர்வதேச அரசியல், உள்ளூர் அரசியல் சம்பந்தமாக இவரது ஆழ்ந்த பார்வையும் சிறந்த எதிர்வு கூறலும் பலராலும் பாராட்டப்பட்டவை. "சிறந்ததோர் ஆசிரியர் ஓய்வு பெற்ற பின்னர் ஓய்ந்து கிடப்பதில்லை" அதற்கிணங்க அவர் பணி சமூகத்திற்குத் தொடர வேண்டும். அவரது எதிர்கால வாழ்விற்கான எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள். - நா.பாலசிங்கம்

செயலாளர் - கல்வி அபிவிருத்தி அமைப்பு, யாழ்ப்பாணம்.

கல்வி அபிவிருத்தி அமைப்பு யாழ்ப்பாணம்

# ராசி பலன்

30.06.2015
(ஆனி 15, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
திரயோதசி முற்பகல் 10.01 மணிவரை
கேட்டை பின்னிரவு 4.34 மணிவரை
இராகுகாலம் 2.56-4.26 மணிவரை
சுபநேரம் 10.26-11.56 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சூரி செவ் புதன் |
| | இரவு 4.39ற்கு தனு-சந் | | குரு சுக் |
| | | | |
| | சந் | சனி | ராகு |

**மேடம்:** கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது, தேகநலனில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும்.

**இடபம்:** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், வருமானம் திருப்திதரும்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வியாபார விருத்தியுண்டு, கடனில் ஒரு பகுதியைக் கொடுத்து தீர்க்கும் வாய்ப்புண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் பெருமைகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**சிம்மம்:** பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி கொள்வீர்கள், உறவினர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறலாம், அரசியல்வாதிகளால் நன்மையுண்டு.

**தனுசு:** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுப செலவுகளில் நாட்டம் காட்டுவீர்கள், அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனைகள் கிடைக்கலாம், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**மகரம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்து கொள்வீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கும்பம்:** அன்பு நண்பர்கள் ஆதரவுக்கரம் நீட்ட முன்வருவர், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், அருமையான நாள்.

**மீனம்:** தேகநலனில் இருந்த பாதிப்புகள் குறையும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத பயணங்கள் இடம் பெறலாம், மறதியால் தவறிய காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1068 பக்கங்களில் என்ன இருக்கிறது?

ஜெயலலிதாவுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கின் இறுதிக் களமாக உச்ச நீதிமன்றம் இருக்கிறது.

சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து ஜெயலலிதாவை விடுதலைசெய்து கர்நாடக உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் கடந்த 22 ஆம் திகதி மேல்முறையீடு செய்யப்பட்டுவிட்டது.

இதே வழக்கில் அரசு வழக்கறிஞராக இருந்த ஆச்சார்யா இப்போது மனுதாரர். ஆச்சார்யாவின் சார்பில் வழக்கைத் தாக்கல் செய்துள்ளவர் வழக்கறிஞர் ஜோசப் அரிஸ்டாட்டில்.

1,068 பக்கங்கள் கொண்ட மேல்முறையீட்டு மனுவில், 1,002 பக்கங்கள் வரை வழக்கின் வரலாறும், நீதிபதி குமாரசாமி வழங்கிய தீர்ப்பின் மொத்த நகலும் இணைக்கப்பட்டுள்ளது. 1,003 ஆம் பக்கத்திலிருந்துதான் மேல்முறையீட்டுக்கான காரண காரியங்களை ஆச்சார்யா அடுக்கியுள்ளார்.



குன்ஹா



குமாரசாமி



ஆச்சார்யா

அதன் உள்ளடக்கத்தைப் படிக்கும்போது திகிலாக இருக்கிறது.

**நீதியை கல்லறைக்கு அனுப்பிய தீர்ப்பு**

கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமி வழங்கிய தீர்ப்பில், ஆவணங்களின் முக்கியத்துவம், ஆதாரங்களின் உறுதி, சாட்சிகளின் நேர்மை முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜான் மைக்கேல் டி.குன்ஹா அளித்த தீர்ப்பை எதிர்த்து, தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்தது.

தமிழக அரசு தன்னிச்சையாக அரசு வழக்கறிஞரை நியமித்ததில் தொடங்கி, கர்நாடக உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நடந்ததில் பல குளறுபடிகள் நிகழ்ந்தன.

அவற்றில் தலையிட்டு நீதிபதி குமாரசாமி, ஒருமுறைகூட கறார் காட்டவில்லை.

மேலும், 'பவானி சிங்கை அரசு வழக்கறிஞராக நியமித்தது செல்லாது' என்று தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், ஜெயலலிதாவின் மேல்முறையீட்டு வழக்கில் எப்படித் தீர்ப்பளிக்க வேண்டும் என்று, நீதிபதி குமாரசாமிக்கு பல வழிகாட்டுதல்களை எடுத்துரைத்தது. அதில் ஒன்றைக்கூட அவர் கடைப்பிடிக்கவில்லை.

மொத்தமாக நீதியைக் கல்லறைக்கு (grave miscarriage of justice) அனுப்பி சமாதி கட்டிய தீர்ப்பாக குமாரசாமியின் தீர்ப்பு உள்ளது.

**சில ஆயிரங்களும் பல கோடிகளும் ஒன்றா?**

ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேரை விடுதலை செய்வதற்கு அக்னிஹோத்ரி வழக்கை முன்னுதாரணமாகக் காட்டியுள்ளார் நீதிபதி குமாரசாமி.

அந்த வழக்கில் வருமானத்துக்கு அதிகமாக அக்னிஹோத்ரியிடமிருந்த சொத்து மதிப்பு வெறும் 11 ஆயிரத்து 350 ரூபாய். அது சேர்க்கப்பட்ட காலம் 13 ஆண்டுகள்.

சொத்து சேர்க்கப்பட்ட காலத்தை ஒப்பிடும்போது அக்னிஹோத்திரியின் வருமானம் மிகக்குறைவு. அதனால்தான் அந்த வழக்கில் குற்றவாளி விடுதலை செய்யப்பட்டார்.



சசிகலா



இளவரசி



சுதாகரன்

ஜெயலலிதா வழக்கில் வருமானம் பல கோடிகள். அது ஈட்டப்பட்ட வருடங்கள் மிகக் குறைவு. அதுவும் 1947 சட்டப்படிதான் அக்னிஹோத்ரி விடுதலை செய்யப்பட்டார். அதன் பிறகு, ஊழல் தடுப்புச் சட்டம் 1988 ஆக என சட்டம் மேம்படுத்தப்பட்டு உள்ளது. அதில், பிரிவு 13 (1) (ந) நியாயமான வருமானம் என்பது 'நியாயமான வழிகளில் வந்த வருமானம் மட்டுமே' என்று தெளிவுபடுத்தி யுள்ளது.

மேலும், வருமானத்துக்கு அதிகமாக ஏதாவது சொத்துகள் பொது ஊழியருக்கு வரும போது, அதுபற்றி அவர் சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு உரிய தகவல்களைத் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும் என்றும் வரையறுத்துள்ளது. இதனைக் கவனத்தில் கொள்ளவில்லை.

**ஆதாரங்கள், ஆவணங்கள், சாட்சிகள் புறக்கணிக்கப்பட்ட தீர்ப்பு நீதிபதி**

குமாரசாமி தனது தீர்ப்பில், கட்டடங்களின் மதிப்பீடுகள் (பக்கம் 776 முதல் 797), வளர்ப்பு மகன் சுதாகரன் திருமணச் செலவுகள் (பக்கம் 797 முதல் 843), கடன் மூலம் வந்த வரவுகள் (பக்கம் 850 முதல் 852), திராட்சைத் தோட்ட வருமானம் (பக்கம் 853), பரிசுப் பொருள்கள் மூலம் வந்த வருமானங்கள் (பக்கம் 853 முதல் 854), சசி என்டர்பிரைஸஸ் (பக்கம் 854 முதல் 860), ஜெயா பப்ளிகேஷன்ஸ் மற்றும் நமது எம்.ஜி.ஆர் மூலம் வந்த வருமானங்கள் (பக்கம் 860 முதல் 876), சூப்பர் டூப்பர் டி.வி (பக்கம் 876 முதல் 883), வாடகை வருமானம் (பக்கம்-883) ஆகியவற்றை ஆய்வுக்கு உட்படுத்தி உள்ளார். ஆனால், இதுபற்றிய ஆதாரங்களும் ஆவணங்களும் ஏராளமாக இருக்கும்போது அவற்றை எல்லாம் சரியாகப் பரிசீலிக்காமல் தவறு செய்துள்ளார்.

**கட்டடங்களின் மதிப்பீடுகள்**

ஜெயலலிதாவுக்குச் சொந்தமான கட்டடங்களின் மதிப்பு என அரசுத் தரப்பு 28 கோடியே 17 லட்சத்து 40 ஆயிரத்து 430 ரூபாயைக் கணக்கிட்டது. அதனைத் தீர



ஆராய்ந்து அந்தத் தொகையிலிருந்து 20 சதவிகிதத்தை சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்து, 22 கோடியே 53 லட்சத்து 92 ஆயிரத்து 344 ரூபாயைக் கட்டடங்களின் மதிப்பாக எடுத்துக்கொண்டது.

ஆனால், நியாயமான கணக்கீடுகள், மதிப்பீடுகள், கட்டடங்களின் ஆடம்பரத் தன்மை, கட்டடங்கள் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட கிரானைட்கள், மார்பிள்கள், அதில் செய்யப்பட்ட வேலைப்பாடுகள், கட்டடங்களிலிருந்த சொகுசு இருக்கைகள், நாற்காலிகள், மேஜைகள், அவற்றின் கலை வேலைப்பாடுகளை எல்லாம் புறக்கணித்துவிட்டு, ஒரு சதுர அடிக்கு 28 ஆயிரம் ரூபாய் என தட்டையாக நீதிபதி குமாரசாமி கணக்கிட்டுள்ளார்.

பொதுப்பணித் துறை பொறியாளர்கள், போயஸ் கார்டன் இல்லத்தின் மதிப்பு 7 கோடி ரூபாய் என்று கணக்கிட்டனர். இந்த மதிப்பீடு மிகவும் அதிகம் என்று குறிப்பிட்ட நீதிபதி குமாரசாமி, மொத்தமாக 17 கட்டடங்களையும் ஒரே மதிப்பில் கணக்கிட்டுள்ளார். (தொடரும்)

-ஜூனியர் விகடன்-

# அதிசய உலகம்

**கண்ணை திறந்து மூடும் உலகின் மிக அழகிய மம்மி...**

**நம்ப முடியாத உண்மை!...**

இத்தாலியில் உள்ள ஒரு அருங்காட்சியகத்தில் 90 வருடங்களுக்கு முன் இறந்து போன சிறுமியின் உடல் பதப்படுத்தப்பட்டு கண்ணாடி பேழைக்குள் வைக்கப்பட்டுள்ளது.



இத்தாலியின் தென் பகுதியில் உள்ள சிசிலியின் பல்மெர்கோ நகரில் அமைந்துள்ள அருங்காட்சியத்தில், 90 வருடங்களுக்கு முன்னர் நிமோனிய காய்ச்சலால் இறந்துபோன 2 வயது சிறுமி ரோசாலியா லம்போட்டாவின் உடல் பதப்படுத்தபட்டு கண்ணாடி பேழைக்குள் வைக்கப்பட்டுள்ளது.

உலகின் மிக அழகான மம்மியாக இது கூறப்படுகிறது.

இதை பார்ப்பதற்கு என்றே சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

உண்மையில் இதை இறந்த உடல் மம்மியாக ஏற்று கொள்ள முடியவில்லை.

ஏனென்றால் ஒரு சிறுமி கண்ணாடி பேழைக்குள் உறங்குவது போன்று அழகிய தோற்றத்துடன் உள்ளது.

பலர் இதை உறங்கும் அழகி என்றே அழைக்கின்றனர்.

இந்த சிறுமி மம்மியின் கண்கள் அடிக்கடி திறந்து மூடுகிறது.

ஆழமான தூக்கத்திலிருந்து ஒருவர் கண்ணை திறப்பது போல் மெதுவாக கண்கள் திறப்பது போல் அது உள்ளது.

இதுகுறித்து ஆவணப்படம் ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சமைப்போம் சுவைப்போம்

## தக்காளி ஊறுகாய்



**தே.பொருட்கள்:**

தக்காளி - 1/2 கிலோ

மஞ்சள் போடி - 1 ஸ்பூன்

வெந்தயப்பொடி - 1 ஸ்பூன்

உப்பு - தே.அளவு

மிளகாய் போடி - 1/2 கப்

நல்லெண்ணெய் - தே.அளவு

எலுமிச்சை சாறு - 2 ஸ்பூன்

**செய்முறை :**

தக்காளியை நன்கு கழுவிவிட்டு சிறிய துண்டுகளாக நறுக்கி கொள்ளவும் . பாத்திரத்தில் எண்ணெய் காய விடவும். எண்ணெய் காய்ந்தவுடன் தக்காளியை போட்டு நன்கு வதக்கவும்.

நன்கு வதக்கியவுடன் மற்ற பொருட்களை சேர்த்து கிளறவும். கலவை கெட்டியாகும்வரை கிளறிக்கொண்டே இருக்கவும்.

ஒரு வாரம் வரை கேட்டுபோகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனத்துடன் மகிந்த களமிறங்க வேண்டும்

(கொழும்பு) —————— பசில் அட்வைஸ்

**நாட்டின் நிலைமைகளை ஆராய்ந்து மிகவும் கவனத்துடனே மகிந்த தேர்தலில் களமிறங்க வேண்டும். யாருடைய தனிப்பட்ட நோக்கங்களுக்காகவும் மகிந்த தேர்தலில் களமிறங்கினால் அது அவரையே பாதிக்கும் என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

யார் என்ன சொன்னாலும் மக்கள் இன்றும் மகிந்தவின் பக்கமே உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராக களமிறக்கப்பட வேண்டும் என்ற கருத்து மகிந்த ஆதரவுக் கூட்டணியால் முன்வைகப்பட்டு வரும் நிலைமையில் அவர் களமிறங்கும் சாத்தியம் உள்ளதா? என்பது தொடர்பில் வினவிய போதே முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை மீண்டும் அரசியலுக்கு கொண்டுவரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை நான் அறிவேன். மக்களும் அவரை மீண்டும் அரசியலுக்கு அழைக்கின்றனர் என்பதும் எமக்கு நன்றாகவே தெரியும். ஆனால் மகிந்த மீண்டும் அரசியலுக்கு வருவது தொடர்பில் என்னால் ஒரு நிலைப்பாட்டில் கருத்து தெரிவிக்க முடியாது. மக்களுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்றால் அந்த வேலைத்திட்டத்தில் மகிந்த எனக்கும் அழைப்பு விடுத்தால் நான் அந்த காரியத்தில் என்னையும் இணைத்துக் கொள்வேன்.

ஆனால் என்னைப்பொறுத்த வரையிலும் மகிந்த மிகவும் கவனத்துடன் நிலைமைகளை ஆராய்ந்து களத்தில் இறங்க வேண்டும். யாருடைய தனிப்பட்ட நோக்கமும் இதன் பின்னணியில் இருக்குமானால் அது மகிந்தவையே பாதிக்கும் என்பதை அவர் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மக்கள் எப்போதும் அவர் பக்கம் உள்ளனர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதேபோல் தீர்மானங்களும் மக்களை பலப்படுத்தும் வகையில் அமைய வேண்டும்.

இன்று நடைமுறையில் இருக்கும் அரசாங்கம் மிகவும் நகைப்புக்குரியதாக மாறியுள்ளது. பெரும்பான்மை ஆதரவு எதிர்க்கட்சி பக்கம் இருக்கையில் பெரும்பான்மை ஆதரவு இல்லாத அரசாங்கம் ஆட்சி நடத்துகின்றது. ஒரு சிலரின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கத்தில் முழு நாட்டையும் பாதாளத்தில் தள்ளியுள்ளனர். உலகில் எந்த நாட்டிலும் இவ்வாறானதொரு ஆட்சி நடக்கவில்லை. ஒரு ஆட்சி எவ்வாறு அமையக் கூடாது என்பதற்கு உலக நாடுகள் அனைத்துக்கும் இலங்கை நல்லதொரு உதாரணமாகும்.

எமக்கு தோல்வி என்பது புதிதல்ல. ஆனால் இன்று நாட்டில் பலமான எதிர்க்கட்சி இல்லாமல் போயுள்ளமையே எமக்கு மிகப் பெரிய தோல்வியாக மாறியுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 62 இலட்சம் மக்கள் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமே.

ஆனால் 58 இலட்சம் மக்கள் இந்த அரசாங்கத்தை எதிர்த்துள்ளனர். அந்த மக்கள் இன்று அநாதரவாகிவிட்டனர். அந்த மக்களை இந்த அரசாங்கம் பழிவாங்கி வருகின்றது.

யாரை ஆதரிக்க வேண்டும். யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது மக்களின் தனிப்பட்ட விருப்பாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் 58 இலஞ்சம் மக்கள் மகிந்தவை ஆதரித்தமை மக்களின் தவறு அல்ல. அது மக்களின் விருப்பமாகும்.

ஆகவே அதை இந்த அரசாங்கம் பழிவாங்கும் நோக்கத்தில் கையாளக் கூடாது. அவ்வாறு செயற்படுவது மீண்டும் இந்த நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் அமைந்து விடும். ஆட்சி மாறலாம் தலைமைத்துவம் கைமாறலாம்.

ஆன்ால் வென்றெடுத்த நாட்டின் விடுதலை மீண்டும் சிதைவடைந்து விடக் கூடாது என்பதை ஒவ்வொரு ஆட்சியாளரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## புதிய உணவு கலாசாரத்தை கொண்டுவரும் பொதுபலசேனாஅமைப்பின் ஞானசாரதேரர்

(கொழும்பு)

இலங்கையின் அரசியலில் சர்ச்சைக்குரியவராக கருதப்படும் பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் பௌத்த பிக்குகள் மத்தியில் புதிய உணவு பழக்கத்தை ஏற்படுத்துகிறார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சாதாரணமாக பௌத்த பிக்குகளுக்கு பொதுமக்களே உணவு தானம் கொடுப்பது வழக்கமாகும்.

இந்த நிலையில் கல கொட அத்தே ஞானசாரதேரர், பன்றி இறைச்சி உட்பட்ட மேலைத்தேய உணவுகள் விற்பனை செய்யப்படும் விருந்தகங்களில் சென்று உணவருந்துவதாக கொழும்பின் ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த விருந்தகத்தில் மதுபான விற்பனை அதிகமாக இடம்பெறுவதாக ஊடகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் அவர் விருந்தகம் ஒன்றுக்கு சென்று ஏனையவர்களுடன் ஏஞ்சல் மீன் வறுவலை ருசிக்கும் புகைப்படம் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே பௌத்த பிக்குகளுக்கு பொது மக்கள் உணவுதானம செய்யும்போது கட்டுப்பாடுகளை விதிக்க சுகாதார அமைச்சு ஆலோசனை முன்வைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பௌத்த பிக்குகளுக்கு ஏற்படும் அதிக கொழுப்பு காரணமாக அவர்களுக்கு மாரடைப்பு போன்ற நோய்கள் ஏற்படுவதை அடுத்தே இந்த ஆலோசனை செயற்படுத்தப்படவுள்ளது. இந்த நிலையில் கலகொட அத்தேயின் உணவுப் பழக்க வழக்கம் குறித்த தொடர்பின் ஊடகம் விபரத்தை வெளியிட்டுள்ளது. (இ)


அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்
இன்று பத்தாம் திருவிழா



என்றும் இனிக்கும் இணுவை முருகன்
ஓரிமா மயில் மேல் ஊத்தே வீதி
பொலிய உலவும் இணுவைக் கந்தா!
சிறுவன் வயதில் தின்ற மாங்காய்
" சீ " யென்றோ வெறுக்கின்றது!
சிறுவன் வயதில் உந்தன் கோவில்
திருவிழாவில் கண்ட காட்சி
உறைந்தென் மனத்தில் உள்ள உள்ள
உவகை இன்றும் பொலிக்கிறது
இளைஞன் பருவ வீற்றில் செய்த
ஏடாகூடம் தீரம் எல்லாம்
கிழவன் வயதில் இன்று நினைக்க
கேவலம்! சீ! என வைத்தனவாம்!
இளைஞன் வயதில் இணுவைக்கோனை
ஏந்தித் தோளில் வீதி சென்ற
அழகு ஞாபகங்கள் இன்றும்
ஆனந்தத்தில் ஆழ்த்துவனவாம்

பண்டிதர் ச.வே.பஞ்சாச்சரம்
(கனடா)

(சி-1389) பத்தாம் திருவிழா உபயகாரர்



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L லண்டன்<br>தொ.இ: B/4698 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 32 செவ் 8 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: NCE<br>தொ.இ: G/1525 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 33 3/4 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/2850 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 9<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSC, MSC/ தனியார்தொழில்<br>தொ.இ: G/1527 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 24 1/4<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: BSC/ தனியார் தொழில் லண்டன் PR<br>தொ.இ: B/850 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 91 செவ் 7 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/1531 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 24 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA/ தனியார் தொழில்<br>தொ.இ: B/851 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 17<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BBA/ அரச தொழில்<br>தொ.இ: G/1532 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail: kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு கடூழிய சிறைத்தண்டனை விதிப்பு

## ஒரு இலட்சம் ரூபா அபராதத்துடன்

(பருத்தித்துறை)

6 லீற்றருக்கும் அதிகமான கசிப்பை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான பெண் ஒருவருக்கு ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்க எடுக்கப்பட்ட போதே நீதிப்தி மா.கணேசராஜா இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

குறித்த பெண் ஏற்கனவே நீதிமன்றத்தினால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கசிப்பு மற்றும் போதைவஸ்து தொடர்பான குற்றங்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் என நீதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-3)

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்

கடந்த வருடம் அல்வாய் வடக்குப் பகுதியில் பருத்தித்துறை நகர சபை ஊழியர் ஒருவரை அடித்துக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பான வழக்கில் சந்தேக நபரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிபதி இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார். (இ-3)




அவுஸ்திரேலிய தொழில்நுட்ப முகாமைத்துவ கல்லூரி, யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கல்வி மற்றும் வணிகபீட பீடாதிபதி தி.வேல்நம்பி, யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன், அவுஸ்திரேலிய தொழில்நுட்ப முகாமைத்துவ கல்லூரியின் பணிப்பாளர் ஜீ.பாச்வா மற்றும் பலர் கலந்து கொண்ட போது... (படம்:-சோபிகா)

# பிள்ளைகளைப் பெற்றோர் கண்காணிக்கத் தவறுவதால் போதைப்பொருள் பாவனை இலகுவாக அதிகரிக்கின்றது

## உளநல மருத்துவ நிபுணர் சிவயோகன் சுட்டிக்காட்டு

**பெற்றோர் தமது பிள்ளைகளை எந்தக் குறையும் இன்றி வளர்த்தும் கண்காணிக்கத் தவறுவதால் இளம் சமூகத்தினரிடையே போதைப்பொருள் பாவனை இலகுவாக அதிகரிப்பதற்கு காரணமாக உள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை உளநல மருத்துவ நிபுணர் எஸ்.சிவயோகன் தெரிவித்துள்ளார்.**



யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ சங்கத்தினரால் இலங்கையில் அதிகரித்துவரும் போதைவஸ்து பாவனை மற்றும் கடத்தல் தொடர்பாக நேற்று முன்தினம் வைத்தியசாலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது பல்வேறு விதமான போதைப்பொருட்கள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. முன்னைய காலத்தில் போதையை ஏற்படுத்துவதற்காக மதுபானம், புகையிலை என்பவற்றை எமது சமூகத்தில் பயன்படுத்தினார்கள். கஞ்சா மிக நீண்ட காலமாக பாவனையில் இருந்து வருகின்றது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் இருப்பது போல அதிகமாக இருக்கவில்லை. அத்துடன் அபின் போன்ற போதைப் பொருட்கள் ஆயுள்வேத மருந்துகளில் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது.

எமது சமூகம் திறந்து விடப்பட்ட சமூகமாக ஒரு துர்ப்பாக்கிய நிலையில் இருப்பதால் உலகில் உள்ள அனைத்து விடயங்களும் எமது சமூகத்தை வந்தடைந்துள்ளது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

போதைப்பொருளின் மிகப் பிரதானமான பிரச்சினை மிகக்குறுகிய காலத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மூளையில் மாற்றத்தை ஏற்படுத்தி போதைப்பொருள் பாவனையில் தங்கியிருக்கும் நிலையை உருவாக்குகின்றது. இது மிகவும் வருத்தப்படக்கூடிய விடயம். அவ்வாறு போதைப்பொருள் பாவனையில் தங்கியிருக்கும் ஒருவர் போதைப்பொருள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுகின்றார். தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டால் அவர் சுயமாகஇயங்குகின்றவராகஇருக்க முடியாது.

போதைப்பொருள் பாவனையை ஆரம்பிக்கும்போது 99வீதமானவர்கள் சுய விருப்புடனேயே ஆரம்பிக்கின்றார்கள்.

மருத்துவத்துக்காக நாம் கொடுக்கும் மருந்துகளை அளவுக்குஅதிகமாகபோதையை ஏற்படுத்துவதற்காக சிலர் பயன்படுத்துகின்றார்கள். அவ்வாறு போதைப்பொருள் பாவனையில் தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டால் அதில் இருந்து மீண்டுவருவது மிக கடினமாக இருக்கும்.

போதைப்பொருள் பாவனையை திடீரென நிறுத்தும் போது அவர்களின் உடல், மனம் மிக மோசமாக பாதிப்படையும். இந்த பாதிப்புக்கு பயந்துதான் பலர் தொடந்து போதைப்பொருளை பாவிக்கின்றார்கள்.

ஆனால் அதற்கு மருத்துவ ரீதியாக நாம் கூற விரும்புவது இந்த பாதிப்பு தற்காலிகமானதுதான். குறைந்தது 4,5 நாட்களில் அந்த பாதிப்பு இல்லாமல் போய்விடும். சிலர் பொறுமையாக இருக்க முடியாமல் தொடந்து பாவிக்கின்றார்கள். ஆனால் மருத்துவ உதவி யுடன் இந்த பாதிப்புக்கள் ஏற் படாமல் தவிர்த்துக் கொள்ள முடியும்.

போதைப்பொருள் பாவனையால் ஒரு தனிப்பட்ட நபருக்கு மன அழுத்தம், பயம், கோபம், தற்கொலை முயற்சி, சந்தேகம் போன்ற வியாதிகள் ஏற்படுகின்றன. தனி மனித ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்படுகின்றது. அதை தொடர்ந்து அவருடைய பொருளாதார வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் போது உற்பத்தித்திறன் பாதிக்கப்படுகின்றது. இதனால் குடும்ப சமநிலை குழப்பமடைகின்றது. குடும்ப கௌரவம் பாதிக்கப்படுகிறது. அதனை தொடர்ந்து சமூக மட்டத்தில் பிரச்சினை ஏற்படுகின்றது. இதை ஒரு தனிப்பட்ட பிரச்சினையாக பார்க்க முடியாது. சமூகம் தொடர்பான பிரச்சினையாக நாம் பார்க்க வேண்டும். போதைப் பொருள் வியாபாரிகள் இளம் சமூகத்தினரை குறிவைத்து விற்பனையில் ஈடுபடுகின்றார்கள், ஏனெனில் அவர்களிடையேதான் இலகுவாக இப் பழக்கத்தை ஏற்படுத்த முடியும். யாழ்ப்பாணத்தில் அதிகமாக இளைஞர், யுவதிகள் இப்பழக்கத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

பாடசாலைகள், வீடுகளில் மாணவர்களை கவனிப்பது குறைவடைந்து செல்கின்றது. வழமைக்கு மாறான செயற்பாடுகள் இருந்தால் பெரியவர்கள் அதை கண்காணிக்க வேண்டும். அவர்களை அடையாளம்கண்டு அப்பழக்கத்தில் இருந்து விடுபட ஊக்குவிக்க வேண்டும்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக இருப்பவருக்கு முக்கியமாக மருத்துவ உதவி வேண்டும், அத்துடன் மனவிருப்பமும் இருக்க வேண்டும். அவரை புதிய மனிதராக மாற்றுவதற்கு ஒரு நீண்டகால திட்டமிடலுடன் நாம் உதவி செய்ய வேண்டும். சமூகத்தில் குடும்பத்தில் அவருக்கு மிக முக்கியமாக ஆதரவு இருக்க வேண்டும். அப்போதுதான் சிறந்த மனிதராக அவரை உருவாக்க முடியும்.

எந்த பாதிப்புகளையும் வருமுன் காப்பது சிறந்தது. அதேபோல் பாரம்பரியமாக சுலோகங்களின் மூலம் போதைப்பொருள் பாவனைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதால் மட்டும் போதைப்பொருள் பாவனையை ஒழித்து விட முடியாது. சமூக மட்டத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே இதை ஒழிக்கமுடியும்.

அத்துடன் பொலிஸாரின் ஆதரவு மிக முக்கியமாக உள்ளது. போதைப்பொருள் பாவனையை இல்லாமல் செய்ய அவர்கள் பல வழிகளில் உதவவேண்டும்.

எமது சமூகம் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது. நாம் முன்னேற வேண்டியதேவை இருக்கின்றது. ஆகவே போதைப்பொருள் பாவனையை வெகு விரைவில் இல்லாமல் செய்ய அனைவரும் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


யாழ்.செய்திகள்

## சித்த மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி தச்சன் தோப்பு கந்தையா கனகம்மா நிதியத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை சித்த மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை விரிவுரையாளர்களாலும் சித்த போதனா வைத்தியசாலை அதிகாரிகளாலும் நடத்தப்படவுள்ள இம் மருத்துவ முகாம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)





சுனேரா நிறுவனமும் யாழ்.திருமறைக் கலாமன்றமும் இணைந்து [illegible] கலையகத்தில் அண்மையில் நடத்திய மாற்று ஆற்றல் கொண்ட தமிழ், சிங்கள பிள்ளைகளின் கலைநிகழ்ச்சியில் இணைப்பாளர் ஜி.பி.பேர்மினஸ் மங்கல விளக்கேற்றுவதையும் கலைநிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க.பெரும்பான்மை வாக்குகளுடன் மாபெரும் வெற்றியைப் பெற்றே தீரும்

## நிதி அமைச்சர் ரவி நம்பிக்கை

(கொழும்பு)

**பாராளுமன்ற தேர்தலில் பலமான கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி களமிறங்கும். பெரும்பான்மை வாக்குகளுடன் மாபெரும் வெற்றியை பெற்றே தீரும் என ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**

இந்த தேர்தலில் மக்கள் ஆணை எந்த தரப்பினர் பக்கம் உள்ளதென்பது தெரியவரும். நீதியான தேர்தலை நடத்தி வெற்றியை உறுதி செய்வோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு கலைக்கப்பட்டது. இதன்படி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தயார் நிலை தொடர்பில் வினவிய போதே நிதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனவரி 8 ஆம் திகதி சர்வாதிகார போக்குடன் கூடிய ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு எதிராக ஜனநாயக புரட்சியை முன்னெடுத்து மாபெரும் வெற்றியை பெற்றுக் கொண்டோம். எனவே எமது முதல் கட்ட புரட்சியை வெற்றி கொண்டோம்.

இந்நிலையில் இரண்டாம் கட்ட புரட்சிக்கு நாம் தற்போது தயாராக உள்ளோம. இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட வர்த்தமானி அறிக்கையின் மூலமாக பாராளுமன்றத்தை கலைத்துவிட்டார்.

எனவே ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படவுள்ளது. தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக தயாராகவுள்ளது. எனவே பலமான கட்சியாக நாம் தேர்தலில் களமிறங்கி மாபெரும் வெற்றியை பெற்று ஆட்சிப்பீடமேறுவோம்.

நாட்டில் இதுவரை காலம் எந்தவொரு அரசாங்கமும் செய்யாதவைகளை 100 நாட்களில் சிறுபான்மை அரசாங்கமாக நிறைவேற்றியுள்ளோம். எவராலும் மாற்ற முடியாதென்று கூறிய நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை திருத்தியமைத்தோம்.

அதுபோன்று பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுததுடன், அத்தியாவசிய பொருட்களின் விலைகளையும் குறைத்து மக்களுக்கு சலுகை வழங்கி னோம். எனவே தற்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, பெரும்பான்மை அரசாங்கமாக எமக்கு மக்கள் ஆணை வழங்கினால் பொருளாதார ரீதியாக நாட்டை கட்டியெழுப்புவோம். எனவே இந்த தேர்தலில்மக்கள் ஆணை எந்த தரப்பினர் பக்கம் உள்ளதென்பது தெரியவ ரும். எவ்வாறாயினும் நீதியான தேர் தலை நடத்திக்காட்டிஎமது வெற்றியை உறுதி செய்வோம் என அவா மேலும் தெரிவித்தார். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 50 | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 300 | 50 | 300 |
| தக்காளி | 80 | 100 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 40 | 60 |
| கோவா | 150 | 120 | 100 | 100 |
| கரட் | 220 | 180 | 150 | 260 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 |
| புடோல் | 120 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 40 | 180 | 80 | 40 |
| சின்ன வெங்காயம் | 140-170 | 160 | 160 | 200 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 160 | 60 | 130 | 140 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 160 |
| பயற்றங்காய் | 120 | 130 | 120 | 80 |
| லீக்ஸ் | 260-280 | 160 | 150 | 200 |
| பீற்றூட் | 120 | 150 | 100 | 160 |
| கறிமிளகாய் | 220 | 180 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 250-350 | 400 | 300 | 400 |
| போஞ்சி | — | 200 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | — | 40 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 30 | 10 |
| தேசிக்காய் | 120-160 | 80 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 200 | 140 | 140 | 160 |
| வெங்காயப்பூ | — | 250 | — | 280 |
| முள்ளங்கி | — | 100 | 50 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 417


ரஞ்சி ரஞ்சினி





மாஸ் கஜாலி





நிறோஜன் கிங்




பிரணவன் ரங்கதுரை




மயூரதன் மயூரன்




செல்வா கோபி கோபிநாத்

அழகான பெண்ணை பார்த்த நம்ம மனசுக்குள்ள ஒரு பட்டாம்பூச்சி பறக்குமே...



அதை புடிச்சு சாகடிச்சிட்டா போதும் நாம வாழ்க்கையில முன்னேறிடலாம்!!!

**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் உப்பு அறுவடை





மன்னாரில் உப்பு அறுவடை நேற்று திங்கட்கிழமை காலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக் கப் பட்டது.

மன்னார், மாந்தை சோல்ட் லிமிட் டெட்டின் 2015 ஆம் ஆண்டுக்கான உப்பு அறுவடையை அதன் பொது முகாமையாளர் முகமட் யூமாயின் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத் தார்.

கடந்த காலத்தில் 2000 தொட க்கம் 3000 மெற்றிக்தொன்னாக காணப்பட்ட உற்பத்தி 2010 ஆம் ஆண்டிற்குப் பின் கிடைக்கப்பெற்ற நிதியின் ஊடாக குறித்த உப்பளம் அபிவிருத்தி செய்யப்பட்டு தற்பொ ழுது 5000 தொடக்கம் 6000 வரை யிலான மெற்றிக்தொன் உப்பு உற் பத்தி செய்யப்பட்டு வருகிறது. இது நாட்டின் உப்பு உற்பத்தியில் 4 தொட க்கம் 5 வீதமாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ)

# நன்னீர் மீன்பிடிச் சங்கங்களுடனான கலந்துரையாடலும் தேவைமதிப்பீடும்

வடமாகாண மீன்பிடி அமைச்சி னால் தேசிய நீர்வாழ் உயிரின வள ர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை யின் (NAQDA) கிளிநொச்சி, முல் லைத்தீவு மாவட்ட விரிவாக்கல் அதி காரியின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங் களைச்சேர்ந்த நன்னீர் மீன்பிடி சங் கங்களுடனான கலந்துரையாட லும் தேவைமதிப்பீடும் கடந்த வெள் ளிக்கிழமை கிளிநொச்சி பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக் கல் காரியாலயத்தில் நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் கிளி நொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட் டங்களைச் சேர்ந்த 12 சங்கங்களின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கல ந்து கொண்டனர்.

மேற்படி சந்திப்பின்மூலம் இரு மாவட்டங்களையும் சேர்ந்த ஒவ் வொரு சங்கங்களுக்கும் என்ன வகையான மீன்குஞ்சுகளை விடுவ தன்மூலம் அவர்கள் சிறந்த பயனை அடைகின்றார்கள். எவ்வளவு மீன் குஞ்சுகள் தேவை, எவ்வகையான மீன்பிடி உபகரணங்கள் தேவை மற்றும் எவ்வாறான பயிற்சிகள் வழங்குவதன்மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தமுடியும் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

இதனடிப்படையில் கண்ணாடி இழைப்படகுகளைத் திருத்துவதற் கான பயிற்சி தங்களுக்கு வழங்கு மாறு கோரினர். பல சங்கங்கள் நீண் டகாலமாக பதிவு செய்யப்படாமல் இயங்கிவருகின்றன. அவ்வாறான சங்கங்கள் பதிவை மேற்கொள்வதற் கான உதவியைக் கோரியிருந்தன.

இதனைத் தொடர்ந்து 2015 ஆம் ஆண்டிற்கான நிதியொதுக் கீட்டில் இருந்து முதற்கட்டமாக 90 ஆயிரம் திலாப்பியா இன மீன் குஞ் சுகள் இரணைமடுக்குளத்தில் விடப் பட்டன.

இறுதியாக அக்கராயன்குளம் நன்னீர் மீனவ சங்கத்திற்கு மத்திய அரசினால் அமைத்துக்கொடுக்கப் பட்ட மீன்குஞ்சு உற்பத்தி நிலைய த்தை பார்வையிட்டதுடன் அதன் புனர மைப்பு பற்றியும் ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் வடமாகாண மீன் பிடி அமைச்சின் செயலாளர் சி.சத் தியசீலன், அமைச்சரின் இணைப் புச் செயலாளர் பத்திநாதன் ஜெறோம், அமைச்சின் பிரதம கணக்காளர் திருமதி அனந்த கிருஷ்ணன் (NA QDA), கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட விரிவாக்கல் அதிகாரி சலி வன் மற்றும் அமைச்சு அதிகாரிகள் பங்கேற்றனர். (இ-9)

# திருமலை சந்தையில் ஜனாதிபதி மைத்திரி

திருகோணமலை கடற்படை முகா மில் நிர்மாணிக்கப்பட்ட 2 மாடிக் கட்டடத்தை அங்குரார்ப்பணம் செய் யும் நிகழ்வில் கலந்து கொள்வத ற்காக நேற்று முன்தினம் திருகோ ணமலைக்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திருகோ ணமலை பொதுச்சந்தையினைப் பார்வையிட்டார்.

அங்கு விலை விபரங்களை விசாரித்து வர்த்தகர்களுடன் அளவ ளாவிய ஜனாதிபதி சந்தைக்கு வந் திருந்த பொதுமக்களிடம் தகவல்க ளைக் கேட்டறிந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவை கோலாகலமாக வரவே ற்ற மக்கள் அவருடன் நட்புறவுடன் அளவளாவியதுடன் தமது பிரதே சத்தில் இருக்கும் குறைநிறைகளை ஜனாதிபதிக்கு தெரிவித்தனர். (இ)

# போதைப்பொருட்கள் கொண்டு வருவதை தடுக்கும் பாரிய பொறுப்பு கடற்படைக்கு

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**தேசிய பாதுகாப்பு தொடர்பான பொறுப்பை நிறைவேற்றுகின்ற அதேவேளையில் சமூகத் திற்கு பாரிய துன்பமாக இருக்கின்ற போதைப் பொருள் தொல்லையிலிருந்து சமூகத்தினை பாதுகாப்பதற்கான பாரிய பொறுப்பு கடற்படை க்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

இந்நாட்டுக்குள் போதைப் பொரு ட்கள் பெருகிவருவதை தடுப்பதற் காக தற்போது நடைமுறைப்படுத் தப்படுகின்ற வேலைத் திட்டத்தை விட விரிவான தேசிய வேலைத்திட்டம் ஒன்றினை எதிர்வரும் நாட்களில் நடைமுறைப்படுத்துவதற்கு கடற் படை தமது பங்களிப்பை வழங்கவேண் டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

திருகோணமலை கடற்படை முகா மில் புதிய சமுத்திர விஞ்ஞானபீட கட்டத்தொகுதியை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வில் நேற்று முன்தி னம் முற்பகல் கலந்து கொண்ட போது ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்வேறு கடத்தல்காரர்களிடமிரு ந்து கரையோர பிரதேசங்களை பாது காப்பது இன்று பெரும் சிக்கலாக மாறியிருக்கின்றது என தெரிவித்த ஜனாதிபதி முப்படை பொலிஸ் மற் றும் சிவில் பாதுகாப்பு திணைக்க ளம் என்பவை பொதுமக்களுடைய பங்கேற்புடன் கடத்தல்காரர்களிட மிருந்து கரையோர பிரதேசத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முறை யான வேலைத்திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்த வேண்டுமென தெரிவித்தார்.

எவ்வித வேற்றுமையும் இன்றி அந்தஸ்து பாராமல் அனைவருக் கும் சட்டத்தை ஒரே விதமாக செயற் படுத்துகின்ற அரசு என்ற விதத்தில் தவறாளிகளுக்கு தண்டனை அளி ப்பதற்கும் அரசு எந்தவிதத்திலும் தயங்காமல் நடவடிக்கை எடுக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன் 20 மற்றும் 22 வருட சேவைக்காலத்தை நிறைவு செய்து 40, 45 போன்ற வயதில் தமது வாழ்க்கையில் பெற்ற அறிவுப் புலமை மற்றும் அனுபவம் என்பவ ற்றை பயனுறுதி மிக்கவகையில் நாட் டுக்கு வழங்கக்கூடிய விதத்தில் கடற் படையில் இருந்து விலகிச் செல்லும் உத்தியோகத்தர்கள் தமது விருப்பத் தின் பேரில் அரச சேவையில் இணைந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் வேலைத்திட்டம் ஒன்றை யும் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதா கவும் இதன்போது ஜனாதிபதி தெரி வித்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் திருகோணமலை கடற்படை முகாமு க்கு விஜயம் மேற்கொண்ட கடற்ப டைத் தளபதி ரியல் அட்மிரல் ஜயந்த பெரேரா வரவேற்று அழைத்துச் சென்றார். இதன்போது பாதுகாப்பு செயலாளர் பி.எம்.யு.டி. பஸ்நாயக் கவும் இந்நிகழ்வில் கலந்து கொண் டார்.

ஜனாதிபதியின் விஜயத்தைக் குறிக்கும் விதமாக முதலில் முகாம் வளாகத்தில் மரக்கன்று ஒன்று நாட் டும் நிகழ்வும் இடம்பெற்றது. அதன் பின்னர் ஜனாதிபதிக்கான இலங்கை கடற்படையின் விசேட அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது.

நினைவுப்படிகத்தை திரை நீக் கம் செய்து புதிய சமுத்திர விஞ் ஞானபீட கட்டடத் தொகுதியை அங்கு ரார்ப்பணம் செய்த ஜனாதிபதி கட் டடத் தொகுதியை பார்வையிட்டார். இக்கட்டடம் அனைத்துப் பயிற்சி வசதிகளைக் கொண்ட 10 கட்டடங்க ளைக் கொண்ட விஞ்ஞானபீட வளா கத்தின் முதற்கட்டடமாகும்.

இதன்போது கடெட் பயிற்சிக் காக திருகோணமலை கடற்படை முகாமுக்கு வருகை தந்த மாணவ மாணவிகளை சந்தித்த ஜனாதிபதி அவர்களுடன் அளவளாவினார். அதன்பின்னர் கடற்படை முகாமின் இறங்குதுறைக்கு சென்ற ஜனாதிபதி புதுப்பிக்கப்பட்ட கப்பலொன்றை வெள்ளோட்டம் விடும் நிகழ்விலும் கலந்து கொண்டார். (இ)




வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான துடுப் பாட்டப்போட்டி ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்ற வட்டுக் கோட்டை இந்துக்கல்லூரி அணியினரைப் படத்தில் காணலாம்.

# பிரதமர் வேட்பாளரைப் பெயரிடுவது சம்பிரதாயமல்ல-எஸ்.பி. கூறுகிறார்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிச்சயமாக பிரதமர் வேட்பாளராக பெயரிடப்படுவார் என குமார வெல்கம குறிப்பிட்டமை தொடர்பில், அமைச்சர் எஸ்.பி. திஸா நாயக்கவிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் வேட்பாளரை பெயரி டுவது ஶ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் சம்பிர தாயமல்ல என அமைச்சர் எஸ்.பி. திஸா நாயக்க தெரிவித்துள்ளார். சம்பிர தாயமல்ல என்பதனால் அது எங்களு க்கு அவ்வளவு முக்கிய இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

போட்டியிடுவதா? இல்லையா? என்பது குறித்து நாங்கள் விசேட அவதானம் செலுத்துவதில்லை.

போட்டியிடுவது பெரிய பிரச்சி னையாக எங்களுக்கு தோன்ற வில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுர்வேத எக்ஸ்போ கண்காட்சி

(கொழும்பு)


தேசிய வணிகர் கழக அனுசரணையுடன் ஆயுர்வேத எக்ஸ்போ 2015 கண்காட்சி எதிர்வரும் 3 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை நடைபெறவுள்ளது.

ஆயுர்வேத எக்ஸ்போ 2015 இல் கண்காட்சி விற்பனை சர்வதேச ஆயுர்வேத மாநாடு ஆகிய விடயங்கள் உள்நாட்டு வெளிநாட்டு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து சிறப்பான முறையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இக் கண்காட்சியில் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும் தனது காட்சிப்படுத்தல்கள், விற்பனை மற்றும் மாநாட்டு நிகழ்வுகளில் பங்கேற்கின்றது.

மேலும் பாரம்பரிய ஆயுர்வேத மாநாடு 4, 5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் பங்கேற்பதற்கு பதிவு செய்யப்பட்ட தனியார் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு கட்டணமாக ரூபா 4 ஆயிரமும் அரசாங்க சேவையில் ஆயுர்வேத மருத்துவ உத்தி யோகத்தர்களுக்கு ரூபா 3500 உம் கட்டணமாக அறவிடப்படும்

இத்துறைசார் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரும் இதில் பங்கு பற்றி பயன்பெறலாம். மேலதிக விபரங்களை www.ayurveda-expo.lk என்ற மின்னஞ்சல் முகவரியூடாக பெற்றுக்கொள்ள முடியும். (இ-3)




# ஐ.ம.சு.கூ.மாற்றுக்குழுவுடன் ஜனாதிபதி இணையமாட்டார்

## ஐ.தே.க.நம்பிக்கை

(கொழும்பு)

**சர்வாதிகார ஊழல்ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைக்க தமது உயிரையும் பொருட்படுத்தாது கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்களின் பேராதரவுடன் ஆட்சிபீடம் ஏறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எவ்வாறான சந்தர்ப்பத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாற்றுக் குழுவாக செயற்படும் மகிந்த அணியுடன் கைகோர்த்து செயற்படமாட்டார். இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி ம்து எமக்கு பூரண நம்பிக்கை உள்ளது என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.**

எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சியானது முன்னெடுக்க எதிர்ப்பார்க்கும் செயற்றிட்டங்கள் தொடர்பிலான ஊடகவியலாளர் மாநாடு கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சருமான எரான் விக்கிரமரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பிரதமர் வேட்பாளர் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்த வண்ணம் உள்ளன. அந்த வகையில் மக்கள் ஒன்றை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இங்கு காணப்படுவது பிரதமர் ஒருவரை நியமிப்பது தொடர்பிலான பிரச்சினை அல்ல. மக்களின் தேவைகளை நிறைவேற்றவும் எமது நாட்டை அபிவிருத்தி பாதைக்கு கொண்டு செல்வதற்கு சக்திமிக்கதான அரசாங்கத்தை உருவாக்குவதே ஆகும்.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் மக்களின் சார்பில் பாராளுமன்ற பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுபவர்கள் தொடர்பில் மக்களும் கட்சியின் தலைவர்கள் உட்பட அனைத்து அங்கத்தவர்களும் சிந்தித்து செயற்பட வேண்டும்.

இன்று எமது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை எடுத்து கொண்டால் அதில் பாராளுமன்ற அங்கத்துவம் பெறும் பல்வேறு பிரதிநிதிகள் ஒவ்வொரு துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாகவும் பட்டதாரிகளாகவும் காணப்படுகன்றனர்.

அந்த வகையிலேயே எமது கட்சியின் பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் அமைந்திருக்கின்றன. இவ்வாறான பிரதிநிதித்துவங்கள் ஒரு நாட்டில் காணப்படும் பட்சத்திலேயே நாட்டின் உண்மையான பொருளாதார நிலை மற்றும் பொருளாதார எதிர்வுகூறல்கள் இனங்காணப்பட்டு மக்களின் உண்மையான பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

எனவே எதிர்வரும் பொது த் தேர்தலில் மக்கள் பிரதிநிதியாக போட்டியிட அனுமதி வழங்கும் குறித்த போட்டியாளர் தொடர்பில் கட்சியின் தலைவர்கள் உட்பட மக்கள் நன்கு சிந்திக்க வேண்டும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊடாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவது தொடர்பிலும் பல்வேறு கருத்துக்கள் எழுந்த வண்ணம் உள்ளன. அந்த வகையில் சர்வாதிகார ஊழல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைக்க தமது உயிரையும் பொருட்பாடுத்தாது கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்களின் பேராதரவுடன் ஆட்சி பீடம் ஏறிய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன எவ்வாறான சந்தர்ப்பத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின்மாற்றுக்குழுவாக செயற்படும் மகிந்த அணியுடன் கைகோர்த்து செயற்படமாட்டார் இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி மீது எமக்கு பூரண நம்பிக்கை உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)





ஈசொப்ற் (Esoft) நிறுவனத்தின் யாழ்.கிளையின் வருடாந்த இரத்ததான முகாம் கடந்த வெள்ளிக்கிழமை HSBC வங்கியின் மேல்மாடியில் இடம்பெற்றபோது....

# வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைதானார்

(கொழும்பு)

தனது பயணப்பையில் 16.9 மில்லியன் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களை மறைத்து மலேசியாவுக்கு கடத்த முயன்ற இலங்கையரொருவரை, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக சுங்கத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர் தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 37வயதான ஆண் என சுங்கத் திணைக்கள பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்

குறித்த நபர், 13,300 அமெரிக்க டொலர், 580 பஹ்ரேன் டினார், 810 கனேடிய டொலர், 3,100 டென்மார்க் குரோனர், 25, 250 யூரோ, 746,000 ஜப்பான் யென், 25 ஜோர்தான் டினார், 14,460 குவைத் டினார், 20,250 நோர்வே குரோனர், 5, 110 ஓமான் ரியால், 11,000 கட்டார் ரியால், 577 சிங்கப்பூர் டொலர், 300 சுவிஸ் பிராங், 4,620 ஸ்ரேலிங் பவுண்ட் ஆகியவற்றுடன் விமான நிலைய புறப்பாட்டு பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறுவர் அரங்கம்

1178




## தேடி வந்த தலைவலி

அரேபியாவில் ஒரு நகரம். அங்கே அலி என்ற வியாபாரி இருந்தான். ஒருநாள், அலி தன் கடையில் இருக்கும்போது.... ஒரு குள்ளன் வந்து நின்றான். பாட்டுப் பாடி, சிறுசிறு கதைகள் சொன்னான். அதைக்கேட்டு "ஆஹா.. ஓஹோ.." என்று சிரித்த அலி, "நண்பரே, நீங்கள் என் வீட்டிற்கு வரவேண்டும். உங்கள் கதைகளைக் கேட்பதற்கு என் மனைவி மிகவும் விரும்புவாள்" என்றான்.

அன்று மாலையே குள்ளன் அலியின் வீட்டிற்குச் சென்று கதைகள் சொன்னான். அலியின் மனைவிக்கு சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகிவிட்டது. அவள் அறுசுவை உணவு தயாரித்துப் பரிமாறினாள். குள்ளன் அள்ளி அள்ளித் தின்றான். திடீரென குள்ளனின் கண்கள் பிதுங்கின. மூச்சுத்திணறி ஏதேதோ சாடை காட்டினான். பேசவில்லை. முகத்தில் நீலம் படர்ந்தது. மயங்கி விழுந்தான்.

அலியின் மனைவி பதற்றம் அடைந்தாள். "இவன் இங்கே கிடந்து செத்துவிட்டால், வழக்கு, நீதிமன்றம் என்று நாம் அல்லல்பட வேண்டியிருக்குமே..." என்றாள்.

ஏதோ யோசித்த அலி, 'இதற்கு ஒரு வழி இருக்கிறது' என்று சொன்னான்.

இருவரும் சேர்ந்து குள்ளனைத் தூக்கினார்கள். பக்கத்தில் உள்ள ஒரு வைத்தியரின் வீட்டுக்குக் கொண்டுசென்று, வாசல் கதவில் சாய்த்துவிட்டு வந்தார்கள்.

சற்று நேரம் கழித்து வைத்தியர் கதவைத் திறந்தார். அடுத்த நொடி, குள்ளன் உருண்டு உள்ளே விழுந்தான். வைத்தியர் பதற்றத்தில் அரைகுறையாகப் பரிசோதித்துவிட்டு, "அய்யோ! ஊரார் பார்த்தால் இவனை நான்தான் கொன்றுவிட்டேன் என் பார்களே... அப்புறம் வழக்கு, நீதிமன்றம், ம்...." வைத்தியர் தீவிரமாக யோசித்தார். பிணத்தை அகற்றியே ஆக வேண்டும். 'ரொட்டிக்கடை அப்துல்லாவின் வீட்டிற்குத் தூக்கிச் செல்வோம். அவன் இப்போது வீட்டில் இருக்க மாட்டான்!' என்று முடிபு செய்தார்.

குள்ளனை இழுத்துச் சென்ற வைத்தியர், அப்துல்லாவின் வீட்டு வராந்தா நாற்காலியில் அமர வைத்துவிட்டு வந்தார்.

சற்றுநேரம் கழித்து அப்துல்லா வந்தார். நாற்காலியில் யாரோ அமர்ந்து இருப்பதைப் பார்த்தார். "டேய்.... நீ இன்று கையும் களவுமாகப் பிடிபட்டுவிட்டாய். தினமும் என் ரொட்டிகளைத் திருடுவது நீதானே?" என்றவாறு ஓங்கி ஓர் உதைவிட்டார்.

தொபீர் என்று குள்ளன் நாற்காலியுடன் தலைகீழாக விழுந்தான். "அய்யோ... இவன் செத்துவிட்டால் பெரிய பிரச்சினை ஆகிவிடுமே! நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டி இருக்குமே..." என்று கதிகலங்கிப் போனார். அப்துல்லா. 'இந்தப் பிணத்தைக் கோடீஸ்வரன் சலீமின் வீட்டில் போட்டுவிடலாம்' என்று முடிபு செய்தார் அப்துல்லா.

அன்று நள்ளிரவில்... சலீம் அந்தக் காட்சியைப் பார்த்துத் திடுக்கிட்டான். வீட்டுக் கதவில் சாய்ந்து அமர்ந்து ஒருவன் உறங்கிக்கொண்டு இருந்தான்.

"அடேய் பயலே! நீ தூங்குவதற்கு என் வீடுதான் கிடைத்ததா....? எழுந்திரு!" என்றான்.

குள்ளனிடம் எந்த அசையும் இல்லை. ஓங்கி ஓர் உதை கொடுத்தான் சலீம்.

தொடரும்......

06.2015
30

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1882 - அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் கார்பீல்ட்டை சுட்டுக் கொன்ற "சார்ல்ஸ் கைட்டோ" தூக்கிலிடப்பட்டான்.
- 1905 - சிறப்புச் சார்புக் கோட்பாட்டை அறிமுகப்படுத்தும் ஐன்ஸ்டீனின் இயங்கும் பொருட்களின் மின்னியக்கவியல் ஆய்வுக் கட்டுரை வெளிவந்தது.
- 1910 - இலங்கையில் ஐந்து சத செப்பு நாணயம் பாவனையிலிருந்து விலக்கப்பட்டது.
- 1917 - முதல் உலகப் போர்: கிரேக்கம் மைய சக்திகள் உடன போரை அறிவித்தது.
- 1934 - ஹிட்லரின் அரசியல் எதிரிகளுக்கு எதிரான வன்முறை ஜேர்மனியில் நிகழ்ந்தது.
- 1937 - உலகின் முதலாவது அவசரத் தொலைபேசி எண் (999) லண்டனில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனியினர் உக்ரைனின் லுவோவ் நகரைக் கைப்பற்றினர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: செர்போர்க் சண்டை முக்கிய துறைமுகம் அமெரிக்கப் படைகளிடம் வீழ்ந்ததை அடுத்து முடிவடைந்தது.
- 1960 - கொங்கோ பெல்ஜியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1972 - ஒருங்கிணைக்கப்பட்ட சர்வதேச நேரத்தில் ஒரு லீப் வினாடி அதிகரிக்கப்பட்டது.
- 1990 - கிழக்கு, மற்றும் மேற்கு ஜேர்மனிகள் தமது பொரு ளாதாரத்தை ஒருங்கிணைத்தன.
- 1997 - முதலாவது ஹரிபொட்டர் நூல் வெளியிடப்பட்டது.
- 1997 - ஹாங்காங் நாட்டின் அதிகாரம் ஐக்கிய இராச்சியத்திடமிருந்து சீனாவுக்குக் கைமாறியது.
- 2002 - பிறேசில் தனது ஐந்தாவது உதைப்பந்தாட்ட உலகக்கிண்ணத்தை வென்றது.

### பிறப்புகள்

- 1933 - எம். ஜே. கே. சிமித், இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்
- 1941 - பீட்டர் பொலொக், தென்னாப்பிரிக்கத் துடுப்பாட்ட வீரர்
- 1960 - டேவிட் எட்லி, பாக்கித்தானிய அமெரிக்க தீவிரவாதி
- 1966 - மைக் டைசன், குத்துச் சண்டை வீரர்
- 1969 - சனத் ஜெயசூரிய, இலங்கைத் துடுப்பாட்ட வீரர்
- 1983 - செரில் கோல், அமெரிக்க நடன அழகி
- 1985 - மைக்கல் ஃபெல்ப்ஸ், அமெரிக்க நீச்சல் வீரர்

### இறப்புகள்

- 1917 - தாதாபாய் நவுரோஜி, இந்திய அரசியல்வாதி (பி. 1825)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லன எல்லாம் தரும் நயினை நாகபூஷணித்தாய்

1.ஆலய தல விருட்சம்– வன்னிமரம்,
2.நாகசாந்தி,நாகப்பிரதிட்டை முடியிறக்கல், அன்னம் ஊட்டல்
3.விற்று வாங்குதல்
4.பௌர்ணமி தினங்களில் சுமங்கலிப்பூசை
5.நித்திய அன்னதானம் வழங்கல்

போன்றன ஆலயத்தில் சிறப்பு நிகழ்வாக காணப்படு கிறது.

அலைகடல் நடுவே வீற்றிருக்கும் அன்னை நாகபூஷணிஅம்பாள் ஆலயம் அறுபத்திநான்கு சக்தி பீடங்களில் புவனேஸ்வரிபீடம் எனப் போற்றி வழிபடும் ஆலயமாகும். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்களின் யாத்திரை தலமாகவும் சிங்களர், பௌத்த மக்கள் கூட வந்து வழிபடும் பத்தினி அம்மனாகவும் அருள்பொழிந்து கொண்டிருக்கிறாள்.

நயினாதீவிற்கு சமீபமாக அனலைதீவு என்னும் ஒரு அழகிய தீவு உண்டு. அதன் தெற்குப் பகுதியில் புளியந்தீவு என்னும் சிறியதீவு உள்ளது. அங்கு பண்டைய காலம் தொட்டு வரலாற்றுடன் காணப்படும் நாகதம்பிரான் ஆலயம் உள்ளது. அந்த ஆலயப் பகுதியில் இருந்து நாகபாம்பு பூக்கொண்டு வந்து நயினாதீவு நாகபூஷணி அம்மனைப் பூசித்ததாக வரலாறுகள் கூறுகின்றன. நாகம் பூசித்த காரணத்தால் நாகபூஷணி எனப் பெயர் வரக்காரணமாகியது.

## நயினை நாகபூஷணிக்கு இன்று இரதோற்சவம்

இதன் அடையாளச் சின்னமாக ஆலய வடக்கு கடல் பகுதியில் இரு பெரிய கற்கள் காணப்படுகிறன. இதில் ஒரு கல் பாம்பு சுற்றியகல் எனவும் மற்றைய கல் கருடன் கல் எனவும் குறிப்பிடப்படுகிறது. நாகபாம்பு அம்மனுக்கு பூக் கொண்டு வந்தவேளை கருடன் பாம்பை வழிமறித்து கல்லில் அமர்ந்து கொண்டதாகவும் பாம்பு மற்றைய கல்லின் மீது சுற்றிக்கொண்டு இருந்ததாகவும் கூறப்படுகிறது. அந்த வழியாக கடல் மார்க்கமாக வந்த வணிகச் செட்டியார்அதனைக் கண்டு அம்மனை நோக்கி வழிபட்டதாகவும் கருடன் பின்னர் அவ்விடத்தை விட்டு பறந்து சென்றதாகவும் நாகம் பின்பு பூக் கொண்டு சென்றதாகவும் அறிய முடிகின்றது.

பாம்புசுற்றிஇருந்தகல்லை பாம்பு சுற்றிய கல் எனவும் கருடன் இருந்த கல்லை கருடன்கல் எனவும் காணக்கூடியதாகவுள்ளது. இந்த கற்களுக்கு ஆலய பதினொறாம் திருவிழா அன்று விசேட அருட்சின்ன வழிபாடுகள் நடைபெறுகின்றது. இந்த அருட்சின்ன வழிபாடுகள் நடைபெறும் வேளைகளில் கடந்த பல வருடங்களாக இந்த பூசை நடைபெறும் பகுதியின் மேல் கருடன் வட்டமிட்டு பறப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. பக்தர்கள் கூட அந்த நேரம் பக்திக்களிப்பில் ஆனந்த கூத்தாடி மகிழ்கின்றனர். ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் ஆலய வடக்கு கடல் பகுதியூடாக நடந்து சென்று இக்கற்களை வழிபட்டும் வருகின்றனர்.

ஆலயத்திற்கு பல்வேறு இடங்களில் இருந்து பக்தர்கள் வந்து தங்கி நின்று நாக தோச நிவர்த்தி செய்து வருகின்றார்கள்.அம்பாள் அவர்களுக்குகேட்டவரங்களைஅள்ளி கொடுக்கிறாள். பௌர்ணமி தினங்கள் ஸ்ரீ சக்கர பூசைகள் நடைபெறுகிறன.

திருமணமாகாத பெண்கள் திருமண வாழ்வு வேண்டியும் திருமணமான பெண்கள் தாலிபாக்கியம் நிலைக்கவும் வேண்டி வழிபடுகின்றனர்.அம்பாள் ஆலய கலியாண மண்டபத்தில் நித்திய அன்னதானம் பல வருட ங்களாக நடைபெற்று வரு கிறது. ஆலய அறங்காவலர் சபையின் செயற்பாடு மிகவும் போற்றுதற்குரியது. பிறந்தநாள்,திருமணநாள், தந்தை, தாயார் நினைவு நாட்கள் ஏதாவது ஒரு நிகழ்விற்கு வருடத்தில் ஆலயத்திற்கு ஐயாயிரம் ரூபா செலுத்தினால் அவர்களது நினைவாக குறித்த தினத்தில் வருடாவருடம் அன்னதாணம் வழங்குவதுடன் விபூதி பிரசாதம் என்பனவும் அவர்களது முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

ஆலய திருவிழாவிற்காக ஆமுதசுரபி அன்னதான சபை இரவு, பகல் அன்னதான சேவையை திறம்பட வழங்கி வருகிறது. ஆலய தென் கிழக்கு வீதியில் தம்பையா தாக சாந்தி நிலையமும் அதனது சேவையை பல வருடங்களாக நடத்திக்கொண்டு வருகி றது. சாரணர் படை, தொண்டர் சபையினர், சென்ஜோன்ஸ் படை வழமைபோல சேவையைச் செய்து வருகிறது. இம்முறை கூடுதலான படகுச் சேவையும் நடைபெற்று வருகிறது.அத்துடன் கடல் பாது காப்புச் சேவையும் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

எல்லோருக்கும் நயினை நாகபூஷணித்தாய் நல்லன எல்லாம் தர,நல் அருள் கிடைக்கப்பிரார்த்திப்போம்.

நயினை விசு–இராசநாயகம்













Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு நாகபூஷணி அம்மன் தேர் திருவிழா சிறப்புமலர்- 30.06.2015

நயினை நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்


## ஜீவாகாரம்

குழந்தைகள் முதல்
முதியோர்வரை பாவிக்க
உகந்த சத்துணவு




## Anna Coffee

100% Pure Ground Coffee




Superbly Blended & Roasted to a Strict Formula....

எமது புதிய தயாரிப்புக்கள்....




அண்ணா தொழிலகம் - இணுவில்.
TEL: 021 - 2241565,
021 7200800, 0112 - 436063

நயினை நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்


## E.S.P. நாகரத்தினம் சக நிறுவனம்
E.S.P Nagaratnam & Co

## அமெரிக்கன் தண்ணீர்

மொத்தமாகவும்
சில்லறையாகவும்
உடனுக்குடன் பெற்றுக்
கொள்ள முடியும்

52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 3096
021 221 7277

அமெரிக்கன் குடிநீருக்கான யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்



நயினை நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

எங்கள் வாழ்வில் உந்தன் அன்பைத் தந்தருள்வாயே!

## கிருபா லேணர்ஸ்

Regd No. DS/ 589, Kiruba Learners, Govt. Approved
A Grade Driving Training School

அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- அரச, தனியார் ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
- எமது கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சிகள் நடைபெறும்.
- மும்மொழிகளிலும் ஆண், பெண் இருபாலாருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்.
- தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.



இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி. 021 222 4353, 021 492 3200, 077 722 5292

பருத்தித்துறை,
021 492 3201
071 454 6958

சாவகச்சேரி
021 492 3202
021 2270700

சுன்னாகம்
021 224 2022
071 454 6956

விசுவமடு
021 320 1515
071 454 6955


கிளிநொச்சி
021 228 5505
071 454 6955

நெல்லியடி
021 300 6550
071 454 6957

இல. 216,
A9வீதி, வவுனியா.
(வசந்தி தியட்டருக்கு
முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று தேர்த்திருவிழா



### நின்பாதம் சரணமம்மா!

பொற்கரகம் நாமெடுத்து இங்கு புங்கவிதை பாடிவந்தோம்
பாங்காக வந்தமர்ந்து தாயே பட்சமுடன் காருமம்மா
சுற்றிவரும் கரகமது இங்கு சுழன்று விளையாடுதம்மா
சற்று மனமிரங்கித் தாயே சதிராடி வாருமம்மா
கற்பூர நாயகியே இங்கு காரணமாய் வந்தவளே
காத்திட வேண்டுமம்மா நம்ம காணுதலை நோகாமல்
பொற்கோவில் கொண்டவளே எங்கள் பூர்வசிவகாமி அம்மா
புவனமுழுதாளுகின்ற எங்கள் பொற்கொடியே நாகம்மா
நேரினிலே நீயிருக்கும் தாயே கோயில் முன்னே வந்திறங்கி
நெஞ்சுருகப் பாடுகிறோம் தாயே நின்பாதம் சரணமம்மா

கலாபூஷணம் மு.தணிகாசலம்
கற்கோவளம்

### மருந்தாகுமன்னை

மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி
மாயா தத்துவ முதலுமாகி உழலும்
அந்தர ஆன்மாதனை அடக்கியென்றும்
ஆளுகின்ற அரியசக்தி நயினையில்
சுந்தரமாக அமர்ந்தாள் சோதியானவள்
சூக்குவ தூல உருவம் கடந்து சுழலும்
யந்திர உலகம் யாதுமாகி நின்றாள்
யாம் பெற்ற தவப்பயன் என்சொல்!

காரைக்கவி

### நயினை அன்னையே சரணமம்மா

தேரேறி வருபவளே தேசம் காப்பவளே
பக்தர் குறைகளை தீர்ப்பவளே வாருமம்மா
தேரேறி வாருமம்மா கண்கள் குளிர்ந்திடவே
பாரில் நன்மைகள் மலர்ந்திட வாருமம்மா
நாட்டை காப்பவளே நமக்கு அருள்பவளே
நாகம் தொழுத நாயகியே சரணமம்மா
நாளும் உன் பாதம் சரணமம்மா
நயினை அன்னையே சரணம் சரணமம்மா

கு.யசீதபன்
அரியாலை

## பொன்விழா நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

கைதடி நவசனசமூக நிலையத்தின் பொன்விழா நிகழ்வுகள் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நிலைய மைதானத்தில் நிலைய தலைவர் முருகேசு சுயோதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வட மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்களான கேசவன் சயந்தன், அ.பரஞ்சோதி, வே.சிவயோகன், சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் தி.தர்சினி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சோ.கோகிலதாசன், மக்கள் வங்கியின் பரந்தன் கிளை முகாமையாளர் க.சிறிதரன், யாழ் மாவட்ட சபையின் முன்னாள் தலைவர் ஆ.ந.இராசேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பொன் விழா மலரின் வெளியீட்டுரையை மலரின் ஆசிரியரும் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலருமாகிய வே.தபேந்திரன் நிகழ்த்த முதற் பிரதியை பண்டாரவளை கல்வி வலயத்தின் தமிழ் பிரிவு பணிப்பாளர் சி.மதியழகன் பெறவுள்ளார்.

நிலையத்தின் கல்விசார் சாதனையாளர்கள் கௌரவிப்பு, கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன. (இ-254)

## சோபிததேரர் யாருக்கும் ஆதரவு இல்லை

நாடாளுமன்றம் கலைத்து தேர்தலுக்கு அழைப்பு விடுத்த பின்னர் கட்சிகள் எவ்வாறு செயற்படுகின்றன என உன்னிப்பாக பலர் கவனித்து வருகின்றனர்.

அரசியல் கட்சிகளை போன்றே சிவில் சமூக அமைப்புகளின் செயற்பாடுகளையும், தேர்தல் முடிவுகளையும் எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர். இவ்வாறான நிலையில் எதிர் வரும் பொதுத் தேர்தலில் தான் யாருக்கும் ஆதரவு வழங்கப் போவதில்லை என மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

தான் கொள்கைக்காக மாத்திரம் செயற்படுவதாகவும், எந்த ஒரு அரசியல் கட்சிக்காகவும் செயற்படவில்லை எனவும் அவர் சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளார். (இ)

## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று தேர்த்திருவிழா



### தேவியே கஞ்சிகையில் வருகவே

நீதிநியாயம் செழிப்புற நல்லாட்சி செழிப்புற
நிம்மதி செழிப்புற தன்மாந்தர் செழிப்புற
ஓதும்கல்வி செழிப்புற கற்றறிஞர் செழிப்புற
ஊருலகு செழிப்புற உழவு செழிப்புற
காதன்மை செழிப்புற கால விளைவு செழிப்புற
களிப்புகள் செழிப்புற உறவுகள் செழிப்புற
ஆதியே அபிராமியே நயினையூர் தேவியே
அருட்சோதியாய் கஞ்சிகையில் வீதி உலா வருகவே

அல்வாயூர் சிவ.சிவநேசன்

### தாயின் புன்னகை காணவே

லங்காதேவி தவிக்கிறாள்
தன் தலையில் உன்பாதம் படுவதற்காகவே
தர்மத்தாய் தவிக்கிறாள்
தன் தலைகாக்க நீ அவதரிப்பதற்காகவே
தமிழ்த்தாய் தவிக்கிறாள்
தன்னை வளர்த்தெடுத்த தாயைக் காணவே
தமிழராகிய நாம் தவிக்கிறோம்
எம் தாயின் புன்னகை காணவே

ச.சுபபிரியன்
தரம்–8D
யா/இ/க

### நலம் தரும் தாயவள்

நயினையின் நாயகியாம்
நலங்கள் யாவும் தருபவளாம்
நாகத்தில் உறைபவளாம்
நல்லாட்சி புரிபவளாம்
மங்களங்கள் தருபவளாம்
மக்கள் மனதில் இடம் பிடித்தவளாம்
அவள் தான்
எங்கள் அன்னை பூஷணி

இடைக்காடு
க.மலர்

### விதி மாற்ற வல்லவளே

விதி மாற்ற வல்லவளே நாகேஸ்வரி உன்
விழிப்பார்வை பட்டாலே மோட்சம் தானே
அரவங்கள் பூஜிக்கும் அம்பிகை நீ அந்த
அரங்கனின் அன்புத் தங்கை நாகேஸ்வரி
உண்மையைக் காக்க வந்தாய் உலக நாயகி
உன்னடியார் உலகெங்கும் இருந்து வந்து –உன்
கருணைக்கு எதுவும் ஒப்பாகாது –அந்த
கல்மலை கூட கசிந்து உருகிவிடும்

த.அபிநாத்
யாழ்.இந்துக் கல்லூரி
தரம்–7 B





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னமும் நியாயம் கிடைக்கவில்லை

## சரணடைந்த போராளிகளின் உறவினர்கள் ஐ.நாவில் கதறல்

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நடந்த போரின்போது ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். இது தொடர்பாக உலகின் பல நாடுகளும் இலங்கைக்கு கண்டனம் தெரிவித்தன. ஐ.நா. மனித உரிமை அமைப்பும் இது தொடர்பாக பல்வேறு கேள்விகளை எழுப்பியது.

இலங்கைக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று அமெரிக்காவால் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதனை ஐ.நா.வின் பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் ஆதரித்தன. இதனைத் தொடர்ந்து இலங்கையில் மனித உரிமை மீறப்பட்டுள்ளதா? என்பது பற்றி விசாரணை நடத்தப்பட்டு இடைக்கால அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. இறுதி அறிக்கை வரும செப்டம்பர் மாதம் ஐ.நா. மன்றத்தில் வழங்கப்பட உள்ளது.



இந்நிலையில், ஜெனீவா நகரில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 29 ஆவது கூட்டத்தொடர் கடந்த 15 ஆம் திகதி தொடங்கி நட ந்து வருகிறது. நேற்று நடந்த ஐ.நா. பொது சபையில், இலங்கையில் நடந்த போரின்போது வெள்ளைக் கொடியோடு சரணடைந்த புலித்தேவன், நடேசன், மலரவன் உள்ளிட்ட ஈழப் போராளிகள், அப்பாவித் தமிழர்கள் என 18 ஆயிரம்பேர்நிலை என்ன? அவர்கள்உயிரோடு இருக்கிறார்களா? என்பதை சொல்ல ஏன் இலங்கை அரசு மறுக்கிறது? என்பது பற்றி பல்வேறு தரப்பினர் கேள்விகளை எழுப்பினர்.

முன்னதாக பசுமைத் தாயகம், பிரித்தானிய 'தமிழர் பேரவை, அமெரிக்க தமிழர் அரசியல் செயற்பேரவை ஆகிய அமைப்புகள் இணைந்து இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள் குறித்த சிறப்பு இணைக் கூட்டத்தை நேற்று முன்தினம் நடத்தியது. இங்கிலாந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர்கள் நீதிக்கான நல்லெண்ண தூதுவருமான லீ ஸ்காட் இக்கூட்டத்துக்கு தலைமை தாங்கினார்.

சர்வதேச மனித உரிமைகள் சட்ட வல்லுநரும், இங்கிலாந்து வழக்கறிஞர் பேரவையின் மனித உரிமைகள் குழு தலைவருமான ஜெனைன் கிறிஸ்டி பிரிமொலா கியூசி , தமிழகத்திலிருந்து வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவைத் தலைவர் க.பாலு ஆகியோர் கூட்டத்தில் சிறப்புரையாற்றினர். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து உலகம் முழுவதும் உள்ள புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள், ஈழமக்கள், மனித உரிமை ஆர்வலர்கள் பேசினர். இலங்கையில் நடந்த போரின் போது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த போராளிகளின் உறவினர்கள், தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி மற்றும் தங்களுடைய நிலைமை பற்றி விளக்கி, துயரம் தாங்காமல் கண்ணீர்விட்டு கதறினர்.

இலங்கையில் நடந்த போரின் போது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த போராளிகளான மலரவன் மனைவி சுசிலாம்பிகை மற்றும் புலித்தேவன் மனைவி குறிஞ்சி மற்றும் நடேசனின் மகன் உள்ளிட்ட பலரின் உறவினர்கள் ஐ.நா. பொது சபையில் பங்கேற்க வந்திருந்தனர். இவர்களுடன் வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவைத் தலைவர் வழக்கறிஞர் க.பாலு உரையாடினார்.

போர்க்குற்றங்கள் தொடர்பாக புலித்தேவனின் மனைவி குறிஞ்சி, மலரவனின் மனைவி சுசிலாம்பிகை மற்றும் நடேசனின் மகன் ஆகியோர் ஐ.நா.வின் நேரடி சாட்சியங்களாக உள்ளனர்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக செப்டம்பர் மாதம் ஐ.நா.மன்றத்தில் இறுதி அறிக்கை அளிக்கப்பட உள்ளது. அப்போது, இவர்களின் சாட்சியங்களால் இலங்கை அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்படும் என்று அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

ஐ.நா.சபை வளாகத்தில் வழக்கறிஞர் பாலு கேட்ட கேள்விகளுக்கு சுசிலாம்பிகையும் குறிஞ்சியும் கண்ணீர் மல்க பதிலளித்தனர்.









மலரவன் மனைவி சுசிலாம்பிகை, புலித்தேவன் மனைவி குறிஞ்சி.



நடேசனின் மகன்









**2009 ஆம் ஆண்டு இலங்கைப் போரின போது சரணடைந்தவர்களின் நிலை என்னவென்று இன்றுவரை தெரியவில்லை. உங்களுடைய கணவர் சரணடைந்ததாக சொன்னார்கள். அவரைப் பற்றிய செய்திகள் ஏதாவது தெரியுமா? சரணடையும் போது நீங்கள் அவருடன் இருந்தீர்களா?**

ஆமாம். அவருக்கு பக்கத்திலேயே நான் இருந்தேன். 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி முல்லைத்தீவு வட்டுவாய்க்கால் பகுதியில் பல போராளிகளுடன் எனது கணவரை எனது பிள்ளையுடன் சரணடைய ஒப்படைத்தேன். அப்போது, 'நீ பிள்ளையுடன் போ' என்று சொன்னார். நான், 'முடியாது. போகமாட்டேன்' என்றேன். இலங்கை இராணுவத்தினர் வயரால் எனது கையில் அடித்தனர். இராணுவத்தினர் எனது கணவரை இழுத்துச் சென்றுவிட்டனர். நான் பிள்ளையுடன் வந்துவிட்டேன்.

**உங்கள் கணவர் சரணடையும்போது, உங்களிடம் என்ன சொல்லிவிட்டு சென்றார்?**

போராளிகள் எல்லோருக்கும் நடப்பதுதான் எனக்கும் நடக்கும் என்று சொல்லிவிட்டு சரணடைந்தார்.

**உங்கள் கணவர் இருக்கிறாரா, இல்லையா? என்ற தகவல் உங்களுக்கு தெரிந்ததா?**

நாங்கள் எல்லா இடங்களிலும் கேட்டோம். அவர் எங்களிடம் வரவில்லை. அவர் எங்களிடம் வந்ததற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று சொல்கிறார்கள். 6 ஆண்டுகள் ஆகியும் இலங்கை இராணுவம் எந்த பதிலையும் தெரிவிக்கவில்லை. நாங்கள் மனவருத்தத்துடன் இன்றுவரை இருக்கிறோம்.

**உங்கள் கணவர் திரும்பி வருவார் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

அவர் உயிருடன் இருக்க வேண்டும் என்றுதான் நாங்கள் நம்புகின்றோம். இலங்கை அரசாங்கம் நல்ல [illegible] வேண்டும். நாங்களும் [illegible] கிறோம்.

**ஈழத் தமிழர்களுக்கு நடந்த இன்னல்களுக்கு என்ன தீர்வு என்று நினைக்கிறீர்கள்?**

ஈழத் தமிழர்களுக்கு நடந்தது கொடுமையான ஒரு செயல். துடிக்கத் துடிக்க கொன்றார்கள். இந்தியா எங்களை காப்பாற்றும் என்று ஏக்கத்துடன் இருக்கின்றோம். துன்பத்தில் இருக்கிறோம்.

**ஐ.நா. மனித உரிமை கூட்டத்தில் கலந்து கொள்ள வந்துள்ளீர்கள். இந்த கூட்டத்தில் என்ன சொல்லப் போகிறீர்கள்?**

நான் எனது கணவரை எந்த சின்ன காயமும் இல்லாமல் உயிரோடு ஒப்படைத்தேன். அதேபோல எனது கணவரை எங்களிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டும். என் பிள்ளையின் அப்பாவை திருப்பித் தர வேண்டும் என்று கேட்கத்தான் வந்திருக்கிறேன்.

**உங்களுடைய மகன் அப்பாவைப் பற்றி கேட்கும்போது, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

பிள்ளை ஏங்கக்கூடாது என்று உண்மை நிலையை சொல்லிவிட்டேன். அப்பா வரவேணடும என்று பிள்ளையும், கணவர் வரவேண்டும் என்று நானும் காத்துக் கொண்டு இருக்கின்றோம். நல்ல செய்தி வரும் என்ற நம்பிக்கையூட்டி பிள்ளையை வளர்த்துக் கொண்டிருக்கிறேன்.

**ஈழத்தமிழர்கள் பிரச்சினையில் கேட்பாரற்ற நிலை இருப்பதற்கான காரணம் என்ன? இவ்வளவு பெரிய இனப்படுகொலை நடந்தும், நியாயம் கிடைக்காமல் இருப்பதற்கு தமிழர்களுக்கு என்று தனி நாடு இல்லாததுதான் காரணம் என்று நினைக்கிறீர்களா?**

தமிழர்கள் வாழாத இடம் இல்லை. தமிழர்களுக்கு என்று நாடு இல்லை. அதனால்தான் இலங்கையில் கேட்பாரற்று தமிழ் மக்கள் அலைந்து திரிகின்றோம். இன்றுவரை எந்த தீர்வும் இல்லை. இதனை நினைக்கும்போது மனது வருத்தமாக இருக்கிறது.

**ஈழத்தமிழர்கள் பிரச்சினையில் ஒரு தீர்வு [illegible] ஏற்பட்டு அங்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் எல்லோரும் ஈழத்தில் வாழ்வதற்கான சூழல் ஏற்பட்டால், அது எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?**

நான் மட்டுமல்ல, எல்லா தமிழர்களும் இதையே விரும்புவார்கள். எல்லா தமிழர்களையும் போல, எனது கணவருடன் நான் எங்கள் சொந்த நாட்டுக்கு போக தயாராக இருக்கிறேன்.

புலித்தேவன் மனைவி குறிஞ்சி:

**2009 ஆம் ஆண்டு நடந்த போரின் போது சரணடைந்த உங்கள் கணவரின் நிலை என்ன?**

எனது கணவர் சரணடையும்போது, அவரது பக்கத்தில் நான் இல்லை. இலங்கை அரசு அனுமதியுடன், சர்வதேசத்துக்கும் தெரியப்படுத்திய பிறகு, இலங்கை இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் புலித்தேவன், நடேசன் உள்ளிட்ட போராளிகள் வெள்ளைக் கொடியுடன் சென்று சரணடைந்தார்கள். அதன்பின் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

உயிரற்ற உடல்களைத்தான் இலங்கை மீடியாவும், சர்வதேச மீடியாக்களும் காட்டின. எப்படி நடந்தது? யார் சொல்லி அதை செய்தார்கள்? எப்படி கொன்றார்கள்? என்று தெரியவில்லை. இன்றுவரைக்கும் தெரியவில்லை.

ஆயுதமின்றி வெள்ளைக் கொடியுடன் சரணடைய சென்ற குழுவை கொலை செய்வது சர்வதேச மனித உரிமை மீறிய செயலாகும். இதுபற்றி சர்வதேச அளவில் விசாரணை மேற்கொள்ள வேண்டும். வெள்ளைக் கொடியுடன் சென்றவர்கள் என்ன காரணத்திற்காக கொலை செய்யப்பட்டார்கள் என்பதற்கு எனக்கும், என்னைப்போல பாதிக்கப்பட்டவர்களுக்கும் பதில் கிடைக்க வேண்டும்.

**இலங்கை பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

நிச்சயம். சர்வதேசமும் முயற்சி செய்தால் கிடைக்கும்.

**இந்தியா உதவி செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்களா?**

இந்தியா மிகவும் பலமான நாடு. விசாரணைக்கு ஆதரவும் மற்றும் தேவையான உதவிகளையும் செய்ய வேண்டும்.

**தமிழகத்தில் உள்ள மக்கள் ஈழத் தமிழர்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு நியாயமான தீர்வு வேண்டும் என்று அரசியல் அழுத்தத்தை கொடுக்கிறார்கள். அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

இதனை நினைக்கும்போது மிகவும் பெருமையாக இருக்கிறது. எங்களுக்கு ஒரு தீர்வு வரும்வரை தமிழக மக்களின் பங்களிப்பும், ஆதரவும் இருக்க வேண்டும். தமிழக மக்களின் பெரிய ஆதரவு இருக்கும் வரை எங்களைப்போல பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு நீதியான தீர்வு கிடைக்கும் என்பதில் நான் முழு நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

**இலங்கையில் மீண்டும் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒரே இடத்தில் வாழ்வதற்கான சூழல் அமைந்தால் எப்படி இருக்கும்?**

எல்லா புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களின் விருப்பமும் அதுதான். எங்களுக்கு என்று நிரந்தர நாடு, நிரந்தர தீர்வு கிடைத்தால் மிகவும் சந்தோஷம். அதைத்தான் நாங்கள் விரும்புகிறோம். அப்படி கிடைத்தால் நாங்கள் உடனே திரும்பி எங்கள் நாட்டுக்கு போய் வாழத் தொடங்கிவிடுவோம்.

'தி இந்து'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருகோணமலை கடற்படை முகாமில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மாடி கட்டடத்தை திறந்து வைப்பதற்காக கடந்த சனிக்கிழமை சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா திருகோணமலை கடற்கரையில் மக்களோடு சேர்ந்து உலாவுவதை படங்களில் காணலாம்.

# வெற்றிலையில் மகிந்த போட்டியிடுவது நிச்சயம்

## வாசுதேவ நாணயக்கார சூளுரை



(கொழும்பு)

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வெற்றிலைச் சின்னத்தில் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவது நிச்சயமாகும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் எம்.பியுமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் 6 ஆம் திகதி மகிந்த தலைமையில் முதலாவது பிரசாரக்கூட்டம் அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தா. இது தொடர்பாக வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சி தோல்வியடைவது நிச்சயமாகும். நாட்டு மக்கள் அக்கட்சியின் பலாத்காரமான சிறுபான்மை ஆட்சியைவெறுத்து விட்டனர். எனவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கு பின்னர் மக்கள் ஆதரவுடன் இந்நாட்டின் பிரதமராக பொறுப்பேற்பார்.

நாம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை கைப்பற்றுவோம். அதன் வெற்றிலை சின்னத்தில் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராக களமிறங்குவது நிச்சயமாகும். இதனை எவராலும் தடுக்க முடியாது.

சந்திரிகாவுக்கு இதனை தடுப்பதற்கான எவ்வித அதிகாரமும் கிடையாது.

அவ்வாறு வெற்றிலைச்சின்னத்தில் போட்டியிடும் வாய்ப்பு கிடைக்காமல் போனால் அதற்கு பின்னர் அதற்கான மாற்று மருந்து எம்மிடம் இருக்கின்றது. மகிந்தவை பிரதமராக்குவதற்கு அனைத்து வியூகங்களையும் வகுத்துள்ளோம். தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம திகதி மகிந்த தலைமையில் முதலாவது பொதுக்கூட்டம் அநுராதபுரத்தில் நடைபெறவ்ள்ளது. இந்நாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சேர்ந்த எம்பிக்கள் மாகாண சபை உறுப்பினர்களான 110இற்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொள்வார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சுதந்திர தேர்தலுக்கான ஆசிய வலையமைப்புக்கு தேர்தலுக்கான மக்கள் இயக்கம் அழைப்புவிடுப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலை கண்காணிப்பதற்கு சுதந்திர தேர்தலுக்கான ஆசிய வலையமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் கண்காணிப்பாளர்கள் 50 பேரை அனுப்பிவைப்பதற்கு அவ்வமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (பவ்ரல்) அறிவித்துள்ளது.

எனினும், இதுதொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை என்றும் அடுத்தவாரம் இறுதியிலேயே இறுதி முடிவு எட்டப்படும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.(இ)

# மகிந்தவுடன்தான் களமிறங்குவோம்

## விமல் உறுதி



எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்டாயம் போட்டியிடுவார் என்று தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, முன்னாள் ஜனாதிபதி போட்டியிடும் கூட்டமைப்பிலேயே தே.சு.மு.வும் இணைந்து போட்டியிடும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய விமல், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதா? என்பது தொடர்பில் அக்கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவுடன் கலந்துரையாடிய பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவித்தா. (இ)

## சிதைவடைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு

மொரட்டுவ, காலி வீதி, வீரபுரன் அப்பு விளையாட்டு மைதானத்துக்கு அருகிலிருந்து ஆணொருவரின் சடலத்தை பொலிஸார் நேற்று திங்கட்கிழமை மீட்டுள்ளனர்.

வாகனங்கள் இச்சடலத்தின் மீது பயணித்துள்ளதால் உடற்பாகங்கள் சிதைவடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்துக்கு அருகிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பையில் கத்தியொன்று காணப்பட்டதாகவும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# இன்று ஒரு தகவல்

## தேடல்

ஒருத்தருக்கு கடவுளைப் பார்க்க வேண்டும் என்று ஆசை. அதற்கு என்னென்னமோ பண்ணிப் பார்த்தார். ஒன்றும் சரியாக வரவில்லை. அந்த சமயம் பார்த்து ஆதிசங்கரர் அந்த ஊருக்கு வந்தார்.

இவர் உடனே அவரிடம் சென்று, ''நான் கடவுளைப் பார்க்க வேண்டும். அதற்கு ஒரு வழி சொல்லுங்க '' என்றார்.

அதற்கு அவர்'' நீ தனிமையான இடத்தில் உட்கார்ந்து இறைவனை நினைத்து தியானம் செய். கடவுள் காட்சி கொடுப்பார்'' என்றார்.

உடனே இவர் ஒரு காட்டுக்குப் போனார். கண்ணை மூடி உட்கார்ந்து தியானம் செய்ய ஆரம்பித்தார்.

''ஏய்... யார்நீ... இங்கே என்ன செய்கிறாய்? '' என்று ஒரு குரல் கேட்டது. இவர் கண்ணைத்திறந்து பார்த்தார்.

பக்கத்தில் ஒரு வேடன் நின்று கொண்டிருந்தான். அவன் மறுபடியும் கேட்டான்.

''இங்கே என்ன செய்கிறாய்?'' என்றான்.

''நான் இறைவனைத் தேடி தியானம் செய்து கொண்டிருக்கிறேன் '' என்றார்.

''இறைவனா? அது எப்படி இருக்கும்? சிங்கம்,புலி கரடி மாதிரி இருக்குமா? எப்படி இருக்கும் சொல்? எனக்குத் தெரியாமல் இந்தக் காட்டில் எதுவும் இல்லை. நீ விபரத்தைச் சொல். நான் பிடித்துக் கொண்டு வருகிறேன்.''என்றார்.

அவருக்கு சங்கடமாகி விட்டது.

''இவன்... விபரம் தெரியாத ஆளாக இருக்கிறான். தியானத்துக்கு வேறு இடைஞ்சலாக இருக்கிறான். இவனுடைய தொந்தரவிலிருந்து எப்படி மீளுவது? '' என்று யோசித்தார்.

உடனே அவனிடம் சொன்னார். ''இதோ பாரப்பா... இறைவன் எப்படி இருப்பார் என்று கேட்டாய் அல்லவா? அதன் தலை சிங்கம் மாதிரி இருக்கும் உடம்பு மனிதன் மாதிரி இருக்கும். அதாவது மனித உடம்பில் சிங்கத்தின் தலை! எங்கேயிருந்தாலும் பார்த்துக் கொண்டுவா'' என்றார்.

சரி கொண்டு வருகிறேன் என்று சொல்லி அவன் புறப்பட்டான். காலையில் புறப்பட்டவன் காடு பூராகவும் தேடியலைந்தான். மாலையாகிவிட்டது.

மிகவும் களைத்துப் போய்விட்டான்.

''நான் இந்தக் காட்டுக்கு ராஜா! என்னாலேயே கண்டுபிடிக்க முடியவில்லையே... இதன் பிறகும் நான் உயிரோடிருக்க வேண்டுமா? '' என்று யோசித்தான்.

உடனே அங்கேயிருந்த ஒரு கொடியைப் பறித்தான். அதை தூக்கக்கயிறு போல் ஒரு மரத்தில் கட்டினான். தற்கொலை செய்து கொள்வதற்காக அதில் கொண்டு போய் தலையை விட்டான். அந்த நேரம் பார்த்து பக்கத்தில் இருந்த ஒரு புதிரில் இலேசாக ஒரு சலசலப்பு.

என்னவென்று திரும்பிப் பார்த்தால் அங்கே ஒரு உருவம் நின்று கொண்டிருந்தது. அதற்கு மனித உடம்பு. சிங்கத்துடைய தலை.

''அடடா உன்னைத் தானே இவ்வளவு நேரமாக தேடிக் கொண்டிருக்கிறேன்'' என்று இறங்கி ஓடிவந்தான்.

அதை அந்தக் கொடியால் சுற்றிக் கட்டிக் இழுத்துக் கொண்டு அந்தப் பெரியவரிடம் வந்தான்.

''இதோ பார்... நீ சொன்ன மிருகத்தை கொண்டு வந்து விட்டேன்'' என்றான்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை. கண்ணைத் திறந்து பார்த்தார். அந்தரத்தில் அந்தக் கொடி ஏதோ ஒரு உருவத்தை சுற்றியிருப்பது தெரிந்தது. உடனே வந்திருப்பது இறைவன் தான் என்று புரிந்து கொண்டார். அந்தத் திசையை நோக்கி வணங்கினார்.

''இறைவா! இங்கே நான் உன்னை நினைத்து தியானம் செய்து கொண்டிருக்கிறேன். என்னை விட்டு விட்டு இந்த உயிரைக் கொல்லுகிற வேடனுக்கு காட்சி கொடுத்திருக்கிறாயே. இது நியாயமா?'' என்றார். அப்போது அசரீரியாக அந்தக் குரல் கேட்டது. இறைவன் சொன்னார்.

''நீ என்னையே நினைத்தாலும் உன்னுடைய முழுமனதும் என்னிடம் வரவில்லை. ஆனால் இந்த வேடன் காலையிலிருந்து மாலை வரைக்கும் என்னை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தான்.

தண்ணீர் கூட குடிக்காமல் முழுமனதுடன் என்னைத் தேடினான். இதுதான் உண்மையான தேடல்! அதனால் தான் அவனுக்கு காட்சி கொடுத்தேன்'' என்றார்.

இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்... எந்த ஒரு ''உண்மையை'' தேடினாலும் அப்படித் தேடுவது உண்மையான தேடலாக இருக்க வேண்டும் என்பது தான்.

திருவிழா நடந்து கொண்டிருந்தது. அதிக சனக்கூட்டம் ஒரு பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலி திருட்டுப் போய்விட்டது. திருடனை எல்லோரும் தீவிரமாக தேடிக் கொண்டிருந்தார்கள்.

மும்முரமாக தேடிக் கொண்டிருந்த ஒருவர் சொன்னார். எவ்வளவு தான் உண்மையாக தேடினால் கூட அந்தத் திருடன் கிடைக்கமாட்டான் என்று தான் எனக்குத் தோன்றுகிறது.

''எப்படிச் சொல்றீங்க'' என்று கேட்டார் பக்கத்திலிருந்தவர். அவர் காதோடு காதாக இவர் சொன்னார். '' இப்பொழுது நாமெல்லாம் தேடிக் கொண்டிருக்கிறது என்னைத்தான் '' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி பலன்கள்

## தொழில் ஸ்தானத்தைப் பார்க்கிறது! தொகை வரும் வழி தெரிகிறது!



**தொழில் ஸ்தானத்தைப் பார்க்கிறது!**
**தொகைகள் வரும் வழி தெரிகிறது!**
**பாசத்தோடு பழகுவதில் முன்னணியில் திகழும் இடப இராசி நேயர்களே!**

உறவுக்கு கைகொடுக்கும் உங்களுக்கு, நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த குருப்பெயர்ச்சி இப்பொழுது வந்துவிட்டது. ஆனி 20 ஆம் திகதி முதல் சிம்மத்தில் அடியெடுத்து வைக்கும் குரு அர்த்தாஷ்டம குருவாக மாறுகிறார். அஷ்டமத்து குருவில் பாதி பங்கு வலிமை அர்த்தாஷ்டம குருவிற்கு உண்டு. என்றாலும், அது சூரியன் வீட்டில் சஞ்சரிக்கப் போவதால் கெடுபலன்கள் குறையும். கொடுக்கும் பலன்கள் நற்பலன்களாக மாறும்.

2016 ஜனவரி மாதம் ராகு-கேது பெயர்ச்சி நிகழவிருப்பதால் ராகு குருவோடு இணையப் போகிறார். விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் சனியின் பார்வை குருவின் மீது பதிகின்றது. சனி உங்கள் ராசியைப் பொறுத்தவரை யோகம் செய்யும் கிரகம். 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். தொழில் ஸ்தானாதிபதியான சனியின் பார்வை பதிந்த குரு சுக ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான்.

இதுவரை சகோதர தொல்லைகளையும், சகாயம் வருவதில் தடைகள், தொழில் தொல்லைகள், உத்தியோகத்தில் உடனிருப்பவர்களால் அமைதியின்மை போன்றவற்றை கொடுத்து வந்த குரு பகவான், இப்பொழுது மாறுவது யோகம்தான்.

**லட்சியங்கள் நிறைவேறும் வரை ஓய்வெடுக்க மாட்டீர்கள்!**

பொதுவாழ்வில் ஈடுபட்டு புகழ் குவிப்பவர்களின் பட்டியலில் இடம் பிடிப்பவர்கள் நீங்கள். தான் மட்டும் சந்தோஷமாக வாழாமல் தன்னைச் சார்ந்தவர்களும் சந்தோஷமாக வாழ வேண்டும் என்று நினைப்பவர் நீங்கள் தான். சுக்ர பலத்தின் மூலமாக உங்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம், பேச்சுத் திறமை, வசீகர தோற்றத்திற்கு சொந்தக்காரர்களாக விளங்குவீர்கள். இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு சிம்ம குரு பெருமைகளை சேர்க்கப் போகிறாரா?, பிரபல்ய யோகத்தை வழங்கப் போகிறாரா? என்பதைப்பற்றிப் பார்ப்போம்.

**மன்னவன் நான்கில் வந்தால்**
**மலைபோல் துயர் வந்தாலும்**
**கண்ணெதிரில் பனியாய் மாறும்!**
**கவலைகள் பறந்து ஓடும்!**
**அன்னியர் ஒத்துழைப்பால்**
**அழகிய தொழில்கள் வாய்க்கும்!**
**பொன்னான ஒப்பந்தங்கள்**
**பூமியில் வந்து சேரும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, வாகனம், வீடு, சுகம், கல்வி, தாய், திருப்பணிகள், கொடுக்கல்-வாங்கல்கள் போன்றவற்றை அமைத்துக் கொடுக்கும் இடத்திற்கு குரு செல்வதால் அந்த இடம் புனிதமடைகின்றது. எனவே, பயணங்கள் அதிகரிக்கும். படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பாசம் காட்டாத பெற்றோர் இனி பாசம் காட்டுவர். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த சிக்கல்கள் அகலும்.

மகம் நட்சத்திரத்தில் குரு சஞ்சரிக்கப் போவதால் கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர்களும், மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் தாராபலம் பெற்ற நாளில் சிறப்பு பரிகாரங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஜனவரி 2016இல் ராகு-கேது பெயர்ச்சி நடைபெறவிருக்கிறது. 4ஆம் இடத்தில் ராகுவும் சஞ்சரிக்கப் போகின்றார். எனவே, அனுகூலமான நாளில் சர்ப்ப சாந்தி பரிகாரங்களை செய்து கொள்வது நல்லது.

**குரு பார்வை கொடுக்கும் யோகங்கள்!**

இதுவரை மூன்றாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபவான் இப்பொழுது நான்காம் இடத்தில் சஞ்சரித்து 8, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார்.

**எட்டினை குருதான் பார்த்தால்**
**இருந்திடும் நோய்கள் தீரும்!**
**பத்தினை குருதான் பார்த்தால்**
**பணியினில் தொய்வு அகலும்!**
**பனிரெண்டைக் குருதான் பார்த்தால்**
**பயணத்தால் பலன்தான் கிட்டும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

குரு பார்வைக்கு குழப்பங்களை அகற்றும் ஆற்றல் அதிகம் உண்டு. எனவே தற்சமயம் பெயர்ச்சியாகி உள்ள குரு உங்கள் ராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களைப் பார்ப்பதால் வாழ்க்கைத்தேவைகள் பூர்த்தியாகும். கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடும். மருந்து, மாத்திரைகள் சாப்பிட்டும் இதுவரை குணமாகாத நோய்கள் இப்பொழுது குணமாகும். என்றாலும், சனியின் பார்வை சுகஸ்தானத்தில் பதிவதால் புதிய நோய்கள் உருவாகலாம். எனவே நோய்க்கான அறிகுறிகள் தோன்றும் பொழுதே மருத்துவர்களிடம் ஆலோசனைகள் கேட்பது நல்லது.




சென்ற ஆண்டில் ஏற்பட்ட இழப்புகளை ஓரளவு ஈடு செய்யும் வாய்ப்பு கிட்டும். தொழிலில் கூட்டாளிகளால் ஏற்பட்ட கவலை அகல முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பது நல்லது. உத்தியோகத்தில் ஊதிய உயர்வு, உத்தியோக உயர்வு போன்றவை தாமதப்படலாம்.

குறிப்பாக தொழில் ஸ்தானத்தை குரு பார்ப்பதால் தொழில் வளர்ச்சி மேலோங்கும். என்றாலும், முழுமையாக மற்றவர்களை நம்பிச் செயறபடக் கூடாது. யாரைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டாலும் அவர்கள் ஜாதகத்தை முழுமையாகப் பார்த்து அதில் தொழில் ஸ்தானம் நன்றாக இருக்கிறதா?, அந்த ஸ்தானாதிபதி உங்கள் தொழில் ஸ்தானாதிபதிக்கு ஏற்றவராக இருக்கிறாரா? என்பதைப் பார்த்த பிறகே முடிவு செய்து கொள்ள வேண்டும்.

தெய்வ பலம் உங்களுக்குப் பின்னணியாக இருப்பதால் திடீரென வரும் மாற்றங்கள் உங்களை ஆச்சரியப்பட வைக்கும். விரய ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் மண்ணை வாங்கலாமா, மனையை வாங்கலாமா? பொன்னை வாங்கலாமா, பொருளை வாங்கலாமா?, என்றெல்லாம் சிந்திப்பீர்கள். பழுதடைந்த வாகனங்களைப் புதுப்பிப்பீர்கள். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் நடைபெறலாம். ஆன்மிகப் பயணங்களில் ஆர்வம் கூடும். திசாபுத்தி பலமிழந்தவர்களுக்கு இடமாற்றம், இலாகா மாற்றங்கள் ஏற்படலாம்.

**கேது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**


தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும். வேகமான வளர்ச்சி கண்டு மகிழ்ச்சியடைவீர்கள். வெளிநாட்டிலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். பிள்ளைகள் வழியில் எடுத்த முயற்சி வெற்றி பெறும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக நடைபெறும். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

**சுக்ர சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். உத்தியோகம் ஸ்திரமில்லாமல் இருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். மேலதிகாரிகள் ஒரு சமயம் ஆதரிப்பர், ஒரு சமயம் அலட்சியப்படுத்துவர். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். மக்கள் செல்வங்களால் உதிரி வருமானங்கள் பெருகும். வீடு கட்டும் முயற்சிக்கு வித்திடுவீர்கள்.

**சூரிய சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

மனக்குழப்பம் அகலும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டு மழையில் நனைவீர்கள். தொல்லை தந்தவர்கள் விலகுவர். வீடு, வாகனங்களால் அனுகூலங்கள் கிடைக்கும். தெய்வீகப் பயணங்களை மேற்கொள்வீர்கள். நண்பர்களால் கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் கேட்பதற்கான அறிகுறிகள் இக்காலத்தில் பிறக்கும்.



**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

குருவின் வக்ர காலத்தில் கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை. உறவினர் பகை உருவாகலாம். கடன் சுமை அதிகரிக்கிறதே என்ற கவலை ஏற்படும். பழைய ஆபரணங்களை கொடுத்து புதிய ஆபரணங்கள் வாங்க உகந்த நேரமிது.

உத்தியோகத்தில் திடீரென மாறுதல்கள் உருவாகலாம். அதை மாற்ற பெரும் பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகலாம். இக்காலத்தில் நம்பிக்கையோடு குருவை வழிபடுவது நல்லது.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

பிரதோஷ நாளில் நந்தியெம்பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அபிராமி அம்மன் வழிபாடு தித்திக்கும் விதத்தில் வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொடுக்கும்.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

**இடப ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்தக் குருப்பெயர்ச்சியில் உங்களுக்கு முன்னேற்றம் கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். சுபச் செய்திகள் இல்லம் தேடி வந்து சேரும். தொழில் ஸ்தானாதிபதியான சனி பகவானால் பார்க்கப்பட்ட குரு பகவான் சுக ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் உருவாகலாம்.

கணவன்- மனைவிக்குளிருந்த கருத்து வேறுபாடு அகலும். மேல படிப்பு சம்பந்தமான முயற்சி செய்தவர்களுக்கு அது கிடைத்து வெளிநாடு சென்று படிக்கும் வாய்ப்புக் கூட உருவாகலாம். குடும்பத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள்.

இதுவரை ரண சிகிச்சை செய்ய வேண்டுமென்று சொன்ன மருத்துவர்கள் கூட இப்பொழுது சாதாரண சிகிச்சையிலேயே உங்கள் நோயை குணமாக்குவதாகச் சொல்வார்கள். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்களில் தாமதம் ஏற்படலாம். குழந்தைகளின் வேலை வாய்ப்பு கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரும். சனிக்கிழமை தோறும ஆதியந்தப் பிரபு வழிபாடும், பௌர்ணமி அன்று மலை வலம் வந்து வழிபாடு செய்வதும் மகத்துவம் தரும்.

(நாளை மிதுனம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 228

## பொறாமையிலிருந்து விடுதலை!

இதயம் இயற்கையானது என்பதை அனுபவபூர்வமாகப் புரிந்துகொள்ளும்பொழுது- உங்களிடம் தானாகவே வருகிறது.

இன்னொரு விடயம்.... மக்கள் உங்களிடம் உங்களுடைய அனுபவங்களுக்கான நிரூபணத்தைக் கேட்கும்பொழுது அதை அவர்களுக்கு நிரூபிக்க வேண்டிய தேவையில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

உங்களுடைய அனுபவங்கள் உங்களுக்கு மிகவும் அந்தரங்கமானதும், தனிப்பட்டதுமாகையால் அதை உங்களால் இன்னொருவருடன் அவருக்குப் புரியும் வகையில் பகிர்ந்துகொள்ள இயலும்.

உண்மையில் பகிர்ந்து கொண்டீர்களானால், முழு அனுபவத்தின் மதிப்பையும் குறைத்துவிடுகிறீர்கள். மேலும் நீங்கள் சொல்வதை மற்றவர் நம்பத் தயாராக இல்லாமல் இருக்கக் கூடும்.

அவர்கள், உங்களையே நீங்கள் ஏமாற்றிக்கொள்வதாகக் கூறக் கூடும். அவர்கள், நீங்கள் எல்லாவற்றையும் தர்க்க ரீதியாக விளக்க வேண்டும் என்று கூறலாம்.

இந்த அனுபவங்களைத் தர்க்கத்தால் விளக்க முடியாது. கடவுள் தர்க்கத்திற்கு அப்பாற்பட்டவர். தர்க்கத்தால் கடவுளை விளக்க முடியுமானால், அது கடவுளைவிட மேலானது என்று ஆகிவிடுகிறது; ஆனால், அது



அவ்வாறு இல்லை அதனால் வெறுமனே உங்களை தளர்வாக்கிக்கொண்டு அனுபவங்கள் நிகழ்வதை அனுமதியுங்கள். யாராயினும் உங்களிடம் கேள்வி கேட்கும் பொழுது புன்னகைத்துவிட்டு மேலே செல்லும் பக்குவத்தைப் பெறுங்கள். உங்களால் பல வார்த்தைகளில் விளக்க முடியாததை, ஒரு புன்னகையால் மீகவும் அழுத்தமாகச்சொல்லி விட முடியும்.

ஞானமடைந்த சிறந்த குருமார்கள், பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் சங்கமித்து பேரானந்தத்தில் திளைத்திருக்கின்றனர்.

மக்கள் என்னுடைய அனுபவங்களை விவரிக்கும்படி கேட்கிறார்கள்.

ஆனால், அவை மிகவும் தனிப்பட்டதாகவும், மறைபொருளாகவும் இருப்பதால் அவற்றை வார்த்தைகளில் விவரிக்க இயலாது. ஆனால், நான் வழிகாட்டியாக இருக்க முடியும். உங்கள் அனுபவத்திற்கா பாதையை உங்கள் வழியை என்னால் காட்ட முடியும். ஆனால், அதை விளக்க ஆரம்பித்தால், அது லோகாயதமாகிவிடும்.


ஆனால், ஒரு விடயம்.... உங்களுக்குள் தீ இருக்குமானால், நீங்கள் அனுபவிப்பீர்கள் என்கிற உயர்ந்த உறுதியை என்னால் அளிக்க முடியும். ஒரு குருநாதரால் அளிக்கப்படும் உறுதியே நீங்கள் சாதிப்பதற்குத் தேவையான சக்தியை அளித்துவிடும். நீங்கள் அனுபவிக்கும் ஆனந்ததிற்குக் காரணம் ஏதுமில்லை என்பதை வெறுமனே புரிந்துகொள்ளுங்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

---

# கருவாச்சி காவியம்



வைரமுத்து-175

ஊத்துனா தண்ணியத் தலவழியா.

சடைசடையாத் தண்ணி ஒழுக தலையாரிப் பாத்துக் கேக்குறா; கிரயம் வீட்டுக்கு மட்டுமா? நாங்க ஆண்டு அனுபவிச்ச பொருளுக்கும் சேத்தா?

வீட்டுக்கு மட்டுந்தானாத்தா.

ஈரம் சொட்டச் சொட்ட வீட்டுக்குள்ள போனா. அம்மிக்கல்லு- குழவி- அடுக்குப் பான- அருவாமணை ஒவ்வொண்ணாத் தூக்கித் தெருவில வச்சா.

ஊர்ல பாதி ஒன்னு அழுகுது.

மாடுகளக் கழத்தி வெளியேத்துரா மகனே.

ஒண்ணும் புரியாமப் புத்தி மாறிப் போயி, பசுமாடு கன்டு ரெண்டையும் கையில புடிச்சு அழுதுவாரான் கொண்ணவாயன்.

ஓம் பொழப்பு இப்படி ஆகிப் போச்சேன்னு கத்திக் குமிக்கிறாக கனகமும் பவளமும்.

மகனுக்கு வீட்டக் காத்துக் குடுக்கணும்னு சுடுகாட்டுக்கு ஓடி வந்து கொள்ளிவச்சா கருவாச்சி. ஆத்தாளுக்கு உசுரோட கொள்ளி வச்சுட்டானேப்பா ஓடிப்போன உதவாக்கரைப் பய.

ம்மா.

வாசப்படியக் கடந்து போற பசுமாடு கத்துது பாவம் கருவாச்சிக்கும் சேத்து.ஷ

வீடு பறிபோயிருச்சே; வெறுஞ் சிறுக்கி ஆயிட்டமே; ஒன்ட எடமில்லையே; ஒதுங்கக் குடுசு இல்லையே; போகல கருவாச்சி.

கனகம் வீட்டுல படுத்திருக்கிறவ மோட்டுவளையப் பாத்து மொனங்கிக்கிட்டே இருக்கா;

எத்தன நாளைக்குச் சோதிப்பியோ சோதிச்சுக்க சாமி. வீட்டத்தான புடுங்கிக்கிட்ட; புடுங்கிக்க. கோயில் இல்லாட்டி சாமி இல்லேன்னு போயி



இதுக்கு மேல இம்சப்பட்ட இன்னும் எந்தலையில என்னென்ன எழுதியிருக்கியோ கடவுள் [illegible] என்னா? எல்லாரும் கடைசியா விட்டு போட்டு ஒப்பாரி [illegible] வெளியேறப்போற எடம். ஒடம்ருமா? வீடு இல்லாட்டி நான் இல்லேன்னு போயிருவேனா? வீடுன்னா பக் காலிபண்ணிட்டு உசுரே போயிரப் போகுது ஒரு நாளைக்கு. ஒரு வீட்டைக் காலி பண்ணிட்டு வெளிய போறப்ப மட்டும் மசமசன்னு அழுது ஏன் மண்ட காயணும்?

இன்னொண்ணும் புத்தியில ஓங்கி ஒறைக்குது அவளுக்கு.


பூமியைத்தான் மனுசன் தம் பேர்ல எழுதிக்கிர்றானோ ஒழிய, பூமி தன் மேல மனுசன பேர என்னைக்காச்சும் எழுதி வச்சிருக்கோ? இதுல என் வீடு என் காடுங்கிறதெல்லாம் முதல் போட்டு வாங்கி வச்ச முட்டாள்த்தனமா இல்லையா? இப்ப நீ இருக்கிற வீடு கொஞ்ச காலத்துக்கு முன்னுக்க ஒன்னதா? இல்ல, ஏழேழு தலமொறைக்கும் ஒனக்கோ ஒங் குடும்பத்துக்கோ இருக்கப் போகுதா? இது ஒரு சத்திரம். வந்து போற நாமெல்லாம் வழிப் போக்கருக. சத்திரம் சொந்தமாகுமா சாலையில போறவனுக்கு?

வீடு மாறி வீடு போறப்ப அது நல்ல வீடு இது கெட்ட வீடுங்கிறாகளே...

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வடமராட்சி கல்லுவம் ஞான வைரவர் கோவில் தீர்த்தத் திருவிழா அண்மையில் நடைபெற்ற போது... (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)



ஈவினை மத்தி கற்பக விநாயகர் சனசமூக நிலையத்தின் பொது நோக்கு மண்டபத் திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது.....

## நிகழ்வின் நிழல்கள்





கோண்டாவில் ஈழத்து சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமி கோவிலில் அண்மையில் நடைபெற்ற சங்காபிஷேகத்தின் போது மல்லாகம் சைவ ஆலய அலங்காரன் கந்தையா வரதாசனுக்கு சாத்துப்படி அலங்கார வித்தகன் எனும் பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டபோது...






Lakeland Inter-American School இன் முன்பள்ளி விளையாட்டு நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் விளையாட்டு நிகழ்வில் பங்குபற்றும் மாணவர்களையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.







புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் சுயமாக சிந்திப்போம் தன்னிறைவு காண்போம் என்ற தொனிப்பொருளில் மாபெரும் கண்காட்சி 22.06.2015 தொடக்கம் 23.06.2015 வரை பாடசாலை வளாகத்தில் வித்தியாலய அதிபர் த.லோகராஜா தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வுக்கு விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் காட்சிப்படுத்தப்பட்ட பொருட்களை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.





யாழ்.சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை முன்னாள் அதிபர் நா.மகேந்திரராஜாவின் கௌரவிப்பு விழா நிகழ்வு அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும் பாடசாலை அதிபர் ப.சுதாசன் வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் விமான தாக்குதல்

## 23 தீவிரவாதிகள் பலி

**அமைதியற்று காணப்படும் பழங்குடியினர் அதிக அளவில் வசிக்கும் ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் விமான தாக்குதல் நடத்தினார்கள். இதில் 23 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.**

இந்த தாக்குதல் கைபர் மற்றும் வடக்கு வரிசிஸ்தான் பகுதியில் நடத்தினார்கள்.

பாகிஸ்தான் தலிபான்கள் மற்றும் லஸ்கர்-இ-இஸ்லாம் தீவிரவாதிகள் பெருமளவில் இப்பகுதியில் மக்களோடு மக்களாக கலந்து கொண்டு அரசுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகிறார்கள். இதனால் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இருந்து இராணுவத்தினர் இவர்களை களையெடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த இராணுவ நடவடிக்கையில் 2018 முக்கிய தீவிரவாதிகள் உட்பட 2700 பேர் கொல்லப்பட்டதாக தெரிவித்துள்ள இராணுவம் 347 வீரர்களையும் இழந்துள்ளதாக தெரிவித்துள்ளது. (இ)

## தாக்குதலை நடத்திய நபர் அடையாளம் காணப்பட்டார்



குவைத் நாட்டில் ஷியா மசூதியில் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தியவர் சவுதி அரேபியாவைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தத் தகவலை குவைத்தின் அரச ஊடகம் வெளியிட்டுள்ளது.

தாக்குதல் நடத்திய அந்த நபரின் பெயர் பாத் சுலிமான் அப்துல் முசேன் அல் காபா என்று தெரியவந்திருப்பதாக குவைத்தின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்த நபர் கடந்த வெள்ளிக்கிழமையன்று, தாக்குதல் நடத்துவதற்கு சில மணி நேரத்திற்கு முன்பாக விமானம் மூலம் குவைத்திற்கு வந்ததாக கூறப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் குறைந்தது 27 பேர் கொல்லப்பட்டனர். அந்த நபர் குவைத்தில் சட்டவிரோதமாக இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஷியா முஸ்லிம்களை ஏற்காத இஸ்லாமிய அரசு அமைப்பு, தாங்கள்தான் அந்தத் தாக்குதலின் பின்னணியில் இருப்பதாக தெரிவித்திருக்கிறது. (இ)

## சமஸ்கிருதம் மனதை தூய்மைப்படுத்துகிறது

### சுஷ்மா சுவராஜ்



சமஸ்கிருத மொழி மக்களின் மனதைத் தூய்மைப்படுத்துவதாகவும் அதனை மேலும் விரிவாகப் பரப்ப வேண்டுமெனவும் இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் நடந்த உலக சமஸ்கிருத மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசிய சுஷ்மா இவ்வாறு தெரிவித்தார்.

60 நாடுகளைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட சமஸ்கிருத வல்லுநர்கள் கலந்துகொண்ட இந்த மாநாட்டில்பேசிய அவர், கங்கை அதனுடன் இணையும் நதிகளை புனித மாக்குவது போல, சமஸ்கிருதமும் தூய்மைப்படுத்துகிறது என்று தெரிவித்தார்.

பழைய மொழிகளில் ஒன்றான சமஸ்கிருதம் இந்தியாவில் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே பேசப்படுகிறது. இருந்தபோதும், இந்திய அரசு அதனை பரப்பும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறது.

இந்தியாவின் அரச ஒளிபரப்பு ஸ்தாபனமான தூர்தர்ஷன், வாரம் தோறும் அரை மணி நேரத்திற்கு சமஸ்கிருத நிகழ்ச்சிகளை வழங்க விருப்பதாக அறிவித்திருக்கிறது. வினோத் மன்காரா என்ற இயக்குநர் சமஸ்கிருத மொழி திரைப்படம் ஒன்றை எடுக்கவிருப்பதாகத் தெரிவித்துள்ளார். (இ)

# ஈரானுடனான பேச்சுவார்த்தை காலக்கெடுவை தாண்டி நீடிக்கும்

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தை, நிர்ணயிக்கப்பட்ட இன்று காலக கெடுவையும் தாண்டி நீடிக்கும் எனக் கூறப்பட்டிருக்கிறது.

இந்தத் தகவலை மூத்த அமெரிக்க பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பெரிய கருத்து வேறுபாடுகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருப்பதாகவும் பேச்சுவார்த்தை ஜூலை மாதம் தொடக்கம் வரை நீடிக்கும் என தெரிவதாக்வும் இருதரப்புமே தெரிவித்துள்ளன.

ஈரானின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜாவத் ஜரிஃப், பேச்சுவார்த்தையை மேற்கொண்டு எப்படி எடுத்துச் செல்வது என்பது குறித்த ஆலோசனைக்காக தற்போது நாடு திரும்பவிருக்கிறார். (இ)



## போதைப் பொருள் பயன்படுத்துவோரில் 6-ல் ஒருவருக்கே சிகிச்சைபெற வாய்ப்பு

உலகளவில் போதைப்பொருட்களின் பயன்பாட்டிற்கு அடிமையானவர்களில் 6 பேரில் ஒருவருக்கு மட்டுமே மருத்துவ வசதி கிடைக்கும் வாய்ப்பு உள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் பயன்பாடு மற்றும் குற்றச்செயல்கள் தடுப்பு தொடர்பான அலுவலகம் வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் இந்தத் தகவல் சுட்டிக்காட்டப்பட்டுளளது.

போதைப்பொருட்களை பயன்படுத்தும் பெண்கள் அதிலிருந்து விடுபடுவதற்கு மருத்துவம் பெற்றுக் கொள்வதில் பல தடைகளை எதிர் நோக்குகிறார்கள் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

உலகளவில் போதைப் பொருட்கள் பயன்படுத்தும் மூவரில் ஒருவர் பெண்ணாக இருக்கிறார் என்றும், அவர்களிலும் மருத்துவ வசதி பெற்றுக்கொள்ளக் கூடியவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது என்றும் ஐ.நா. அறிக்கை கூறுகிறது. இதுமட்டுமன்றி ஆப்கானிஸ்தானில் ஒபியம் உற்பத்தி அதிகரித்துள்ளது என்றாலும், உலகளவில் கொக்கோ இலை பயிரிடப்படுவது குறைந்துள்ளது என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது. (இ)

## பாதுகாப்பான சூழ்நிலையில் தேர்தலை நடத்த வேண்டும்

(புஜும்புரா)

புருண்டியில் நேற்று நாடாளுமன்ற மற்றும் உள்ளூராட்சிதேர்தல்கள் இடம்பெற்ற நிலையில் பாதுகாப்பான சூழ்நிலையில் தேர்தலை நடத்த வேண்டும் என ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீமூன் கோரிக்கை விடுத்துள்ளார். கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான புருண்டியில், ஜனாதிபதி பியார்ரே நகுருன்ஜிசா பதவி வகித்து வருகிறார். இந்த நிலையில் அங்கு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

அதில் 3 ஆவது தடவையாக அவர் போட்டியிடுகிறார். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு போராட்டம் நடைபெறுகிறது. இதற்கிடையே ஜனாதிபதி பியார்ரே நகுருன்ஜிசா, தன்சானியா நாட்டில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்க சென்ற போது அங்கு திடீரென இராணுவ புரட்சி ஏற்பட்டது.

இப்புரட்சியை ஜனாதிபதி பியார் ரேவுககு எதிராக செயற்படும் தளபதி கோட் பிராய்டு நியோம்பர் நடத்தினார். ஆனால் அரசு விசுவாச இராணுவ படைகள் புரட்சியை முறியடித்து விட்டன. இதனையடுத்து திட்டமிட்டபடி தேர்தல் நடைபெறும் எனக் கூறப்பட்டது.

இதனை எதிர்த்து பொதுமக்களும், மாணவர்களும் தொடர்ந்து போராடி வருகிறார்கள். இதுவரை வன்முறை சம்பவங்களில் 70 பேர் உயிரிழந்துள்ளார்கள், இலட்சக்கணக்கான மக்கள் அயல் நாடுகளுக்கு அகதிகளாக செல்கிறார்கள். அங்கு நடைபெறும் வன்முறை சம்பவங்களால் தேர்தலை தள்ளிவவைக்கும் படி ஐ.நா. பொதுச செயலாளர் ப்ான் கீ மூன் உட்பட பலர் கோரிக்கை விடுத்து வந்தனர். ஆனால் ஜனாதிபதி பியார்ரே நகுரு ன்ஜிசா அதை மறுத்துவிட்டார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் வெளியிட்டுள்ள அறிக்கையில் நாட்டில் நிலவும் பதற்றமான சூழ்நிலையை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் தேர்தல் நடைபெறவிருப்பது கவலை அளிக்கிறது. எனினும் குறைந்தபட்சம் தேர்தலை பாதுகாப்பான சூழ்நிலையில் நடத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த இரண்டு தேர்தல்களையும் புறக்கணிப்பதாக 15 எதிர்க்கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய் சிக்கலிலிருந்து விடுபட முடியும்

**கோதுமை இடியாப்பம்**

தேவையான பொருட்கள்

சலித்த கோதுமை மாவு- ஒரு கப்,
உப்பு தேவையான அளவு,
நல்லெண்ணெய்-ஒருஸ்பூன்,
பனை வெல்லம் (அ), சுகர் ப்ரீ பவுடர் -10 கிராம்(அ) ஒரு சிறிய பக்கெட்,
தண்ணீர்- அரை கப்

**செய்முறை**

அரை கப் தண்ணீரை நன்கு கொதிக்கவைத்து அதோடு உப்பு, எண்ணெய், பனை வெல்லம் (அ) சுகர்ப்ரீ பவுடர் சேர்த்து அடுப்பை நிறுத்திவிடுங்கள். மாவை இந்தத் தண்ணீரில் சிறிது சிறிதாக கலந்து உருண்டைப் பதத்திற்கு வந்தவுடன் ஆறவைத்து இடியாப்ப அச்சில் பிழிந்து இடியாப்பம் போல செய்யவும். காரம் தேவைப்பட்டால் மிளகுத் தூள் போட்டு மாவில் பிசைந்தும் பிழிந்து கொள்ளலாம். சத்தான இடியப்பம் இது.

**மக்காச்சோளம்**

தேவையான பொருட்கள்.

பெரிய மக்காச்சோளம்-2,
உப்பு-தேவையான அளவு,
காய்ந்த மிளகாய்-2,
அமெச்சூர் பவுடர்- அரை தேக்கரண்டி,
எலுமிச்சை சாறு- அரை தேக்கரண்டி,
கடுகு, கறிவேப்பிலை- தாளிக்க,
நறுக்கிய கொத்தமல்லி- 3 மேசைக்கரண்டி

**செய்முறை**

சோளத்தை வேகவைத்து உதிர்த்துக்கொள்ளவும். கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு, கறிவேப்பிலை, காய்ந்த மிளகாய் தாளித்து, உப்பு, அமெச்சூர் பவுடர், எலுமிச்சைச்சாறு கலந்து சோளத்தைக் கொட்டி வதக்கி, கொத்தமல்லி தூவி இறக்கவும். மாலை நேரத்திற்கு ஏற்ற சிற்றுண்டி இது.

**சம்பா கோதுமை ரவை பிட்டு**

தேவையான பொருட்கள்

சம்பா கோதுமை ரவை- 100 கிராம்,
உப்பு-தேவையான அளவு,
தண்ணீர்- ஒரு டம்ளர்,
சுகர் ப்ரீ பவுடர்- ஒரு சிறிய பக்கெட்

Health Care
## மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

சுகர் ப்ரீ பவுடர் கிடைக்காத பட்சத்தில் சுகர் ப்ரீ மாத்திரையை பொடியாக்கிக் கொள்ளலாம்.

**செய்முறை**

சம்பா கோதுமை ரவையை வெறும் வாணலியில் வறுத்துக்கொள்ளவும். சம்பா கோதுமை ரவையோடு உப்பு, சுகர்ப்ரீ பவுடர் கலந்து தண்ணீர் தெளித்து பிட்டு மாவு பதத்திற்கு பிசறிக்கொள்ளவும். அதை இட்லி பாத்திரத்தில் பிட்டு வேகவைப்பது போல் வேகவைக்கவும். இரவு நேரத்தில் சாப்பிட ஏற்ற சுவையான சிற்றுண்டி இது.

**கீரை ஃப்ரைட் ரைஸ்**

தேவையான பொருட்கள்

அரைக்கீரை (அ) முருங்கைக்கீரை- அரை கட்டு,
புதினா- ஒரு பிடி, பச்சை மிளகாய்-2,
மிளகாய்த்தூள்-ஒருமேசைக்கரண்டி,
உப்பு தேவையான அளவு
புளி- கோலி உருண்டை அளவு,
நல்லெண்ணெய்-ஒரு மேசைக்கரண்டி,
பாசுமதி அரிசி- ஒரு கப்,
பெருங்காயம்- தேவையான அளவு

**செய்முறை**

பாசுமதி அரிசியை வேக வைத்து உதிர் உதிராக சாதம் வடித்துக்கொள்ளவும். சாதத்திற்கு அரிசியைக் குக்கரில் வைக்கவேண்டாம். வடிகஞ்சி சாதத்தோடு தங்கிவிடுவதால் ஸ்டார்ச்சின் அளவு அதிகமாகி விடும் வாய்ப்புள்ளது. பிரஷர் பானில் எண்ணெய் ஊற்றி கீரை, புதினா, வெங்காயம், பச்சை மிளகாய், புளி, உப்பு சேர்த்து வதக்கி, மிக்ஸியில் அரைத்து எடுத்துக் கொள்ளவும். இந்த விழுதை பச்சை வாசனை போக தண்ணீர் ஊற்றிக் கொதிக்கவைத்து கலவை கெட்டியானதும் சாதத்தைக் கொட்டி நன்றாகக் கலந்து கிளறி விட்டு இறக்கவும். நீரிழிவு நோயாளிக்கேற்ற எண்ணெய் இல்லாத ருசியான ப்ரைடு ரைஸ் தயார்.

**டோக்ளா**

தேவையான பொருட்கள்

சம்பா கோதுமை மாவு- ஒரு கப்,
கடலை மாவு- கால் கப்,
பச்சை மிளகாய்-4,
நறுக்கிய வெங்காயம்- அரை கப், மோர்-அரை கப்,
உப்பு-தேவையானஅளவு,
எண்ணெய் , கடுகு, கறிவேப்பிலை-தாளிக்க தேவையானது

**செய்முறை**

ரவை, கடலை மாவு இரண்டையும் வெறுமனே கலந்து கொள்ளவும். கலந்த மாவோடு பச்சை மிளகாய் சேர்த்து மோரைக் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றிப் புரட்டிக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் ஊற்றி கடுகு, கறிவேப்பிலை தாளித்து, மஞ்சள் தூள், உப்பு, சேர்த்து அதில் புரட்டி வைத்திருக்கும் மாவைக்கலந்து பிட்டு வேக வைப்பதுபோல வேக வைத்துக்கொள்ளவும். வாய்க்கு ருசியான மாலை நேர சிற்றுண்டி இது.

முற்றும்

# மலையகத்தில் மாபெரும் தொழிலாளர் போராட்டம்

## மலையக மக்கள் முன்னணி எச்சரிக்கை

தொழிலாளர்களின் சம்பள உயர்வு பேச்சுவார்த்தையின் மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையில் எந்த விதமான இணைக்கப்பாடும் காணப்படாது எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி நான்காம சுற்று பேச்சு வார்த்தை நடத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் தொழிலாளர்களுக்கு சாதகமாக ஒரு முடிவு காணப்படா விட்டால் மறுநாளான ஜூலை 3ஆம் திகதி மலையக மக்கள முன்னணியின் அரசியல் துறை தலைவர் வீ.இராதாகிருஷ்ணன் தலைமையில் மலையகத்தில் மாபெரும் தொழிலாளர் போராட்டம் இடம் பெறும் என மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் விடுத்துள்ள ஊடாக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, முதலாளிமார் சம்மேளனம் வைத்துள்ள மூன்று கோரிக்கைகளையும் நிராகரிப்பதாகவும் மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணி ஆகியோர் 2ஆம் திகதி இடம்பெறவிருக்கின்ற பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் நலன் புரி விடயங்களை தீர்மானிக்கும் கூட்டு ஒப்பந்தம் மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தது. இதனை புதுப்பப்பதற்காக இடம்பெற்ற மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தையும் தோல்வி கண்டுள்ள நிலையில் எதிர்வரும் 2ஆம் திகதி வரை பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மகிந்தவுக்கு எதிராக புதிய கூட்டணி?

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேட்பாளராக போட்டியிடும் எந்த ஒரு கூட்டணியிலும் இணையாமல்இருப்பதற்குஜாதிகஹெலஉறுமய தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ராஜபக்ஷவினர் மீண்டும வருவதனை தடுப்பதற்கான அனைத்து அரசியல் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அக்கட்சியின் பொது செயலாளர் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இது தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

எப்படியாவது பொதுத்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியில் அல்லது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் பிரதமர் வேட்பாளராக போட்டியிட்டால் அதற்கு எதிரான கூட்டணி ஒன்றை கட்டியெழுப்புவதற்கு ஜாதிக ஹெல உறுமய தற்போது வரையில் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை தேற்கடிப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய பாரிய அளவிலான முயற்சிகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ)

# செல்ஃபி


ரூபன்

இந்தவார சிறந்த செல்பி


எண்ணா வில்லங்கத்தனம்...
நிதர்சன்


பிருந்தன், யாழ்ப்பாணம்

ரம்ப குனியாதீங்க பாஸ்

யதுஸ், பருத்தித்துறை


குட்டி புவி


தல சுப்பர்
வித்தியாதரன், கோண்டாவில்

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையே இனிமையான எதிர்காலங்களை உருவாக்குகிறது.
- ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும்

## அழுத்தம் கொடுப்போம் என்கிறார் சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு காணிகளிலுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து நாங்கள் பின்வாங்க மாட்டோம் எனவும் அடுத்த கட்டமாக அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக நேற்று திங்கட்கிழமை சென்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"1000 ஏக்கர் விடப்படுவதாகக் கூறப்பட்ட போதும், அதற்கும் குறைவான இடங்களே விடப்பட்டுள்ளன.

சில பகுதி களில் சிறிய சிறிய பகுதிகள் விடு விக்கப்படவேண்டியுள்ளது. தெல்லிப்பளை வைத்தியசாலை சார்ந்த பகுதிகளில் 46 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டால் மக்கள் வைத்திய சாலைக்கு இலகுவாக சென்றுவர முடியும்" என்றார்.

மேலும், மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிலைப் பாட்டில் இருந்து நாங்கள் அசையவில்லை.

காணிகள் விடுவிக்கப்பட்டு மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவதற்கு தொடர்ச்சியாக அழுத்தங்கள் கொடுப்போம்" என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் கூறினார். (செ-11)

# 5 ஆண்டுகளுக்குள் தனிநபர் வருமானம் 6 ஆயிரம் அமெ.டொலர்களாக அதிகரிக்கும்

## ஜனாதிபதி மைத்திரி எதிர்பார்ப்பு



(கண்டி)

எதிர்வரும் 5 ஆண்டுகளுக்குள் நாட்டின் தனிநபர் வருமானத்தை 6,000 அமெரிக்க டொலர்களாக அதிகரிக்க எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தெஹிஓவிட பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

சீதாவாக்க கங்கையில் மாணிக்க கல் அகழ்வு கூட்டு திட்டத்தின் நன்மைகளை அந்த பிரதேச மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

165 புனித ஸ்தலங்கள்,சமுர்த்தி பயனாளிகள், அங்கவீனர்கள் மற்றும் பெற்றோர்களை இழந்த 900 சிறார்களுக்கு 342 இலட்சம் ரூபா நிதி இதன் போது பகிர்ந்தளிக்கப்பட்டது.

இதன் போது ஜனாதிபதி தெரிவித்ததாவது,

நாட்டின் பொருளாதாரம் என்பது அந்த நாட்டு மக்களின் வருமானம், தேசிய பொருளாதார நிலைமை மற்றும் அந்நிய நாட்டு செலாவணி என்பவற்றின் அடிப்படையிலேயே காணப்படுகின்றது.

எனவே எதிர்வரும் 5 வருடங்களுக்குள் தனிநபர் வருமானத்தை 6000 அமெரிக்க டொலர்களாக அதிகரிக்க உத்தேசித்துள்ளோம். இதனை அடைய எமது முதலீடுகள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி போன்ற துறைகள் மேலும் வலுவடைய வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (செ-11)

## சமாதான சுட்டியில் இலங்கைக்கு 114ம் இடம்

அவுஸ்திரேலியாவை தளமாக கொண்டியங்கும் பொருளாதார மற்றும் சமாதானத்துக்கான நிறுவகத்தின் உலக சமாதான சுட்டியில் இலங்கை 114ஆவது இடத்தை பெற்றுள்ளது.

இந்த நிறுவகமானது 162 நாடுகளில் மேற்கொண்ட தேசிய சமாதானம் தொடர்பான அளவீடுகளிலிருந்தே இலங்கைக்கு 114ஆம் இடம் கிடைத்துள்ளது. இந்த பட்டியலில் இலங்கையின் அயல் நாடுகளான பூட்டான் 18வது இடத்திலும், நேபாளம் 62வது இடத்திலும், பங்களாதேஷ் 84வது இடத்திலும், இந்தியா 143வது இடத்திலும், பாகிஸ்தான் 154வது இடத்திலும், ஆப்கானிஸ்

இதேவேளை மிகவும் அமைதியான நாடு என்ற பட்டத்தை ஐஸ்லாந்து இம்முறையும் தக்கவைத்துக்கொண்டுள்ளது. (செ-11)

## நாகபாம்பாக பொது பல சேனா

பொது பல சேனா எதிர்வரும் தேர்தலில் பொது ஜன பெரமுன என்ற பெயரின் கீழ் நாகபாம்பு சின்னத்தின் கீழ் போட்டியிடவுள்ளதாக அதன் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்து ள்ளார்.

நாங்கள் தொடர்ந்தும் பொது பல சேனா என்ற பெயரிலேயே செயற்படுவோம், ஆனால் பதிவு செய்யப்பட்ட அரசியற்கட்சியான எக்சத் மஹார்சபா பக்சய என்ற அரசியற் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவோம், எக்சத் மஹாசபா பக்சய எதிர்காலத்தில் பி.ஜே.பி - பொது ஜன பெரமுன என அழைக்கப்படும்,

இக்கட்சிக்கு புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர், நாகபாம்பு சின்னத்தில் போட்டியிடுவதற்காக தேர்தல் ஆணையாளரின் அனுமதிக் காக காத்திருக்கின்றோம்.

தேர்தல் ஆணையாளர் புதிய கட்சி எதனையும் பதிவு செய்யமறுத்துள்ளதாலேயே நாங்கள்ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கட்சியுடன் இணை ந்துள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

## தேர்த்திருவிழா

நவாலி அட்டகிரி கந்தசுவாமி கோவில் வருடாந்த தேர்த்திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (3)

யாழ்.கந்தர்மடம் அரசடி வீதி செல்வ நாக பூஷணி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 9.30 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணிக்கவுள்ளார்.

# பொதுத் தேர்தலில் வெற்றிபெற கூட்டமைப்பின் வியூகம் என்ன?

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆசன ஒதுக்கீட்டில் இணக்கம் கண்டுள்ளதாக அறிவித்துள்ளது.

கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள கட்சிகள் ஆசன ஒதுக்கீட்டில் இணக்கம் கண்டுள்ளதையே இணக்கம் என்று கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

ஆசன ஒதுக்கீட்டில் இணக்கம் என்று சொல்வதன் மூலம் ஒரு பெரிய முரண்பாட்டிற்கு சிக்கலின்றித் தீர்வு கண்டதுபோல காட்ட கூட்டமைப்பு முற்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் பெற்றுள்ள கட்சிகளில் தமிழரசுக் கட்சி தவிர்ந்த, ஏனைய கட்சிகள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் ஒன்றைப் பெறுவதே கடினமான காரியம்.

இந்நிலையில் அந்தக் கட்சிகள் எங்களுக்கு இரண்டு ஆசனம் என்று ஒருபோதும் கேட்கமாட்டா.

தேர்தலில் வெல்வது மிகப்பெரிய கடினம் என்றிருக்கும் வேளையில் இன்னொரு ஆசனத்தையும் ஒரு கட்சி கேட்குமாயின் அந்தத் தலைமையிடம் அரசியல் இராஜதந்திரம் இல்லை என்றே கூறவேண்டும்.

ஆக ; நடைபெறப்போகும் தேர்தலில் ஆசன ஒதுக்கீட்டில் எந்தப் பிரச்சினையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திக்காதென்பது தெளிவு.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கக் கூடிய ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட மக்கள் ஆதரவு உண்டு.

எனவே மக்கள் ஆதரவு உள்ளவரை வேட்பாளராக்குவதன் மூலம் விருப்புவாக்கு என்ற அடிப்படையில் இன்னும் இருவர் நன்மையடைய முடியும்.

அந்த வகையில் மக்கள் செல்வாக்குள்ளவரை கூட்டமைப்பு ஒதுக்க முடியாது.

அவ்வாறு ஒதுக்கினாலும் அவரை வரவேற்பதற்குத் கட்சிகள் செங்கம்பளத்தோடு காத்திருக்கின்றன.

இந்த வகையில் ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு ஆசனம் போதும் என்று கேட்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள கட்சித் தலைமைகள் விரும்பும்.

இது ஒருபுறம் இருக்க,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது வேட்பாளர்களை மாற்றி அமைக்க வேண்டிய தேவையும் உள்ளது.

கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினர்களாக வெற்றி பெற்ற சிலர், அந்தப் பதவிக்கு முற்றிலும் தகுதியற்றவர்கள் என்று தமிழ் மக்கள் தீர்மானித்துள்ளனர்.

இத்தகையவர்கள் யாரென்பதை கூட்டமைப்பின் தலைமை அறிந்திருக்கும் என்று நம்பலாம்.

எனவே கடந்த பொதுத் தேர்தலைப் போல எதிர்வரும் பொதுத் தேர்தலையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதிவிட முடியாது.

நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு இரு பெரும் சவால்களைச் சந்திக்கப் போகின்றது.

அதில் ஒன்று வட புலத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைப்பு மற்றையது பலத்துடன் போட்டியிடக் கூடிய கட்சிகள் தேர்தலில் களமிறங்குவது.

இந்த இரு பெரும் போட்டிகளையும் முறியடித்து தேர்தலில் வெற்றியைச் சாதிப்பதாக இருந்தால், பழையன கழிந்து புதியன புகுதல் காலத்தின் தேவையாக இருக்கும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



எனக்கு முக்தி வேண்டாம், பக்தி வேண்டாம், வசந்த காலம்போல், உலகிற்கு நன்மை செய்வதற்காக இலட்சம் நர்கங்களுக்கு வேண்டுமானாலும் நான் போவேன். இதுவே எனது மதம்.

சராசரி மக்களை அன்றாட வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தயார் செய்யாத கல்வி, ஒழுக்க வலிமையைத் தராத கல்வி, பிறர் நலம் நாடுகின்ற உணர்வைத் தராத கல்வி, சிங்கம் போன்ற தைரியத்தைக் கொடுக்காத கல்வி, அதைக் கல்வி என்று சொல்ல முடியுமா? ஒருவனைத் தன் சொந்தக் கால்களிலேயே நிற்கும்படி செய்வதே உண்மையான கல்வி.

வாழ்வு பிரமாதமில்லை, மரணம் ஒரு மனமயக்கம், இவை எதுவும் இல்லை. இருப்பவர் இறைவன் ஒருவரே. பயப்படாதே, என் உள்ளமே ஏகாந்தத்தில் இரு.

நாம் முன்னேறியே ஆக வேண்டும்- பாதிரிகளும் அரசியல்வாதிகளும் காட்டுகின்ற அழிவுப்பாதையில் அல்ல; நமது பாதையில், நமது சொந்த வழியில் வேலை பூர்த்தியாகாமல் அரைகுறையாக நிற்கின்ற கட்டடம் பயங்கரமாகத்தான் இருக்கும். அதைப்பூர்த்தி செய்யுங்கள், எல்லாம் அதனதன் இடத்தில் அழகாகக் காட்சியளிக்கும். இதுதான் எது திட்டம். நான் இதைப் பூரணமாக நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ரீதியிலான உதைபந்தாட்ட போட்டி கண்டியை வீழ்த்தி சம்பியனாகியது யாழ்.லீக்









தேசிய ரீதியான உதைபந்தாட்டத்தில் கண்டி அணியை வீழ்த்தி சம்பியனாகியது யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் தேசிய ரீதியான 19 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டியை நடத்தி வந்தது.

இப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கண்டி லீக் அணியை எதிர்த்து யாழ்.உதைபந் தாட்ட லீக் அணி பலப்பரீட்சை நடத்தியது.

ஆரம்பம் முதலே மிகவும் பரபரப்பாக நடைபெற்ற முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சிறப்பாக விளையாடின

சந்தர்ப்பத்தினை சரியாக பயன்படுத்திய கண்டி லீக் அணி முதலாவது கோலினை போட்டது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற முதல் பாதி ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் கண்டி லீக் அணி முன்னிலை வகித்தது.


இரண்டாம் பாதி ஆட்டத்தில் கண்டி லீக் அணி தொடர்ந்தும் ஒரு கோலினை போட்டு ஆதிக்கம் செலுத்தியது.

பினனர் ஆக்கிரோசம் அடைந்த யாழ்.லீக் அணியினர் தொடர்ந்து தமது மிரட்டலான அதிரடி ஆட்டம் மூலம் 4 கோலினை போட்டனர்.

இதனால் இறுதியில் யாழ்ப்பாண லீக் அணியினர் 4:2 என்ற கோல் கணக்கில் அதிரடி வெற்றி பெற்றனர். (க)

விளையாட்டுச் செய்திகள்

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் இலங்கை அதிரடி வெற்றி



பாகிஸ்தானுக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை சென்றுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில்பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் பாகிஸ்தான் வென்றது. இரண்டாவது டெஸ்ட் கொழும்பில் நடந்தது.

இதில் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்சில் 138 ஓட்டங்கள் எடுத்தது. ஹபீஸ் அதிகபட்சமாக 42 ஓட்டங்கள் எடுத்தார். பந்துவீச்சில் தரிந்து கவுஷால் 5 விக்கெட் வீழ்த்தினார்.

இதைத் தொடர்ந்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி இரண்டாம் நாள் ஆட்ட முடிவில், 9 விக்கெட்டுக்கு 304 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

பின்னர் தொடங்கிய மூன்றாவது நாள் ஆட்டத்தில் இலங்கை அணி முதல் இன்னிங்சில் 315 ஓட்டங்களுக்கு ஓல்-அவுட்டானது. சில்வா 80 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ்தான் அணி சார்பில் யாசிர் ஷா 6 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் 177 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்சை பாகிஸ்தான் அணி தொடங்கியது. முன்கள வீரர்கள் நிதானமாக விளையாடினாலும், பின் வரிசையில் உள்ளவர்கள் நிலைக்கவில்லை.

இதனால் பாகிஸ்தான் அணி 329 ஓட்டங்களுக்கு ஓல்-அவுட்டானது. பாகிஸ்தானின் அசார் அலி சதம் (117) அடித்தார். அஹ்மத் ஷேசாத் (69) அரைசதம் விளாசினார். பந்துவீச்சில் தமிங்க பிரசாத் 4 விக்கெட் வீழ்த்தினார்.

இதனால் இலங்கை அணிக்கு 153 ஓட்டங்கள் இலக்காக கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து இலங்கை அணி எளிய இலக்கை நோக்கி கடைசி நாள் ஆட்டமான நேற்று தனது 2வது இன்னிங்சை தொடங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக கருணாரத்ன, விதானகே களமிறங்கினர். இருவரும் நல்ல தொடக்கம் கொடுத்தனர். விதானகே அதிரடியாக விளையாடி 34 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

சங்கக்கார (0) யாசிர் ஷா பந்தில் டக்- அவுட் ஆக நடையை கட்டினார். அதே சமயம் கருணாரத்ன (50) அரைசதம் எடுத்தார்.

பின்னர் அணித்தலைவர் மத்யூஸ் (43), திரிமன்னே (20) ஆகியோரின் நிதான ஆட்டத்தால் இலங்கை அணி 3 விக்கெட் இழந்த நிலையில் 153 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இதன் மூலம் முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணிக்கு இலங்கை பதிலடி கொடுத்துள்ளது. மேலும், டெஸ்ட் தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் செய்துள்ளது.

போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் தமிங்க பிரசாத் தெரிவானார். (க)

# சூதாட்டத்தில் ஈடுபட்ட ரெய்னா, ஜடேஜா, பிராவோ லலித் மோடி பரபரப்பு தகவல் வெளியீடு

## கடிதத்தை உறுதிப்படுத்திய ஐ.சி.சி

ஐ.பி.எல் சூதாட்டத்தில் ரெய்னா, ஜடேஜா, பிராவோ ஆகியோருக்கு தொடர்பிருப்பதாக ஐ.பி.எல். முன்னாள் தலைவர் லலித் மோடி வெளியிட்ட தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐபிஎல் போட்டியில் நிதிமுறைகேடு செய்ததாக லலித் மோடி மீது குற்றம் சாட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து இவர் தற்போது இங்கிலாந்தில்தலைமறைவாக உள்ளார்.

இந்நிலையில் இந்த நிதிமுறைகேடு விவகாரத்தில், அரசியல்வாதிகள் சிலருக்கு தொடர்பிருப்பதாக கூறி சமீபத்தில் பரபரப்பை ஏற்படுத்தினார்.

இதைத் தொடர்ந்து தற்போது, ஐபிஎல் சூதாட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர்களான ரெய்னா, ஜடேஜா, பிராவோ ஆகியோருக்கு தொடர்பிருப்பதாக பரபரப்பு தகவல்களை வெளியிட்டுள்ளார்.

மேலும், அவர்கள் சூதாட்ட தரகரான ரியல் எஸ்டேட் அதிபர் பாபா திவானுடன் நெருங்கி பழகியதாகவும், அவர்களிடம் இருந்து இலஞ்சம் பெற்றதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

அதுமட்டுமல்லாது 2013ம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) தலைமை அதிகாரி தேவ் ரிச்சர்டனுக்கு இந்த தகவலை அனுப்பி இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து ஐ.சி.சி. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

கடந்த 2013-ம் ஆண்டு ஜூன் மாதம் லலித்மோடி அனுப்பி வைத்த இரகசியமான இமெயில் கிடைத்தது. இது தான் சமீபத்தில் டுவிட்டரில் வெளியாகி இருந்தது. இந்த கடிதத்தை ஐ.சி.சி.யின் ஊழல தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## செல்வி தாமு தவமணி

**வாழ்த்துக் கவிதை**

கடமை நெறி தவறாத காரிகையே!
திடமான மனவுறுதி கொண்டு நாளும்
நவமணியாம் சுடர் விட்ட நாயகியே!
தவமணியே! குணநிதியே! தவத்தில் மிக்கோய்!
சுகனமுறு தாரகையாய் வரணியூரில்
சுடர் விட்ட தூயவளே! வாழி வாழி

தாய் மொழியும் சைவநெறி கண்ணெனவே போற்றி
கண்ணியமாய் கற்பித்த கற்பகமே!
தண்மதியே! தாராள மனமுடையாய்
வாழியவே! தேக சுகம் பெற்று வாழியவே



பூதலத்தில் நீங்கள் புகழ் வரைந்து
சாதனைகள் செய்ததனை சொல்லும் வரலாறு
வரணி மத்திய கல்லூரியில் நெடிது காலம்
தடம் பதித்த கல்வியின் கலங்கரையே!
தெய்வ பலம் பெற்று செகதலத்தில் வாழியவே

(982)

25 வருடங்களாக வரணி மத்திய கல்லூரியில் கல்விப் பணியாற்றி ஓய்வு பெறும்
ஆசிரியரை பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.
கலாநிதி செ.சந்திரசேகரம், கலாநிதி சி.உதயகுமார், சி.சுந்தரமூர்த்தி, சி.பிரபாகரன், க.குணரட்ணம், சு.கருணாநிதி, சி.ஜெகன், பா.பார்த்தீபன், த.தர்மசீலன், கு.சபேசன், இ.ஜெயரூபன், க.அஜந்தன், கு.ஜெயமாறன், சி.சிவச்சந்திரன், ப.றமேஸ், சு.கங்கைஅமரன், க.இராசகாந்தன், சி.சுதாகரன்

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 1978 - 07 - 13



உதிர்வு 2015 - 06 - 29

எமது சக மாணவி அனிதவாணியின் அன்புக் கணவர்

அமரர் **நவரத்தினம் சுதாகரன்**
(யாழ் பல்கலைக்கழக ஊழியர்)

ஆசிரியர் சமூகமே இங்கு
ஆறாத்துயர் கொள்கையிலே
ஆறுதல் கூறி நீவீர் உற்ற துயர்
எவர் தான் துடைப்பார்
அவனியிலே வந்துதித்த யாவருமே
ஆண்டவனின் அடியினிலே
சேர்வது தான் விதியென்றால்
விதியவனே இடையினிலே சதி புரிந்தான்
சோகமயமாகி சோர்வே எமதாகி
சிரம் தாழ்த்தி சிந்துகின்றோம் - கண்ணீரை
நற்குணத்துச் சீலனவன்
நவரத்தினம் சுதாகரனுக்காய் ...

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(C-1439)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவால் துயருறும்
ஆசிரியர் கலாசாலை சமூகம்,
கோப்பாய்.

**யாழ்ப்பாண வரலாற்றில் நீங்கள் எப்போதும் கண்டிராத நிகழ்வு உங்கள் நகரில் கணக்கிட முடியாது இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில் தொகையான ஆபரணங்கள்**

**யாழ்ப்பாண யுவதிகள் தங்க முலாம் பூசப்பட்ட மற்றும் ரேடியம் பூசப்பட்ட அவுஸ்திரேலியா வைர நகைகளை கொள்வனவு செய்யலாம்**

## உரிய ஏற்றுமதி விலையான ரூ. 1500 /=, 3000 /= வரையிலான நகைகளுக்கு

# ரூபாய். 150 /= - 300 /= மட்டுமே

## 2015 ஜூன் 30, ஜூலை 1, 2, 3

**(செவ்வாய், புதன், வியாழன், வெள்ளிக்கிழமை) திகதிகளில்**

**நேரம் : முற்பகல் 10.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை**

**(பகல் உணவு இடைவேளை கிடையாது)**

ரூ. 150/- க்கும், ரூ. 300/- க்கும் விற்பனை செய்யும் ரூ. 3000/- ஏற்றுமதி பெறுமதி கொண்ட 10 இலட்சம் நகைகளை இன்றே கொள்வனவு செய்யுங்கள்

**இவ் விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.**

- மும்பாய் தங்க முலாமிடப்பட்ட செயின் பெண்டன் — ரூ. 150/- Only
- சிபரா தங்க முலாமிடப்பட்ட கம்மல் — ரூ. 150/- Only
- அமெரிக்கன் டைமன் கல் பதித்த கம்மல் — ரூ. 150/- Only
- மேல் நாட்டு மாதிரியிலான தோடுகள் — ரூ. 150/- Only
- அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் — ரூ. 150/- Only
- அவுஸ்திரேலிய டயமன்ட் செயின் — ரூ. 300/- Only
- பஞ்சாம் பியூட்டி குயின் மாலை — ரூ. 300/- Only
- அமெரிக்க டயமன்ட் நெக்லஸ் — ரூ. 300/- Only
- கிறிஸ்டல் நெக்லஸ் செட் — ரூ. 300/- Only
- ஐதராபாத் முத்து நெக்லஸ் செட் — ரூ. 300/- Only
- இத்தாலிய டயமன்ட் தோடுகள் — ரூ. 300/- Only
- ரேடியம் பிளேடிங் டயமன்ட் தோடுகள் — ரூ. 300/- Only
- ஜெய்ப்பூர் குண்டன் நெக்லஸ் செட் — ரூ. 300/- Only
- அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் — ரூ. 300/- Only

**விசேட சலுகை : விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு ரூபாய் 500/-ரூ 1000/- வரை ஆபரணங்**

(976)

# இடம் : வீரசிங்கம் மண்டபம்

இல. 12, கே.கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.

அனுமதி இலவசம் தொலைபேசி : 075 5075675 பெண் விற்பனை பிரதிநிதிகள் தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.